உ

கணபதி துணை.

உலோககுரு

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

சோதிடம் பன்னீராயிரத்தில்

# பிதிர்பாவகம்.

Al. 44278
1992
T.9444

இஃது,

எட்டயபுரம் சமஸ்தானம் மகாராஜ ராஜ ராஜபூஜித

மகாராஜா அவர்கள்

கனிஷ்ட சகோதரர்

மகாராஜ ராஜபூஜித

தங்கமகாராஜா அவர்கள்

பொருளுதவிகொண்டு,

---

சோதிடம்

M. சுப்பிரமணியபிள்ளையால்

சென்னை ஆளை:

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

---

1913

Registered Copy Right.

எஸ். முத்தையபிள்ளை,
புஸ்தக ஷாப்பர்
புதுமண்டபம், மதுரை.

கோள்டன் பிரஸ், மதராஸ். என். சி.



உ

குமரகுருபரன் றுணை.

## சங்கராச்சாரியர்சோதிடம் 12000-த்தில்

# பிதுர்பாவக விளம்பரம்.

சோதிட முணர்ந்த சுந்தர புருடர்க்
காதர விதுவென் றருளிய பொருளிதே!

முற்காலத்தில் அருமையாய் மூதோர்கள் அருளிச்செய்த சோதிடசாஸ்திரங்கள் யாவும், யாவருக்கும் நேத்திரம்போன்ற தேயாம். அச்சோதிடம் கணிதஸ்கந்தம், சாதகஸ்கந்தம், சங்கிதாஸ்கந்தம் என மூவகைப்படும். இவற்றுள் இராசி அம்சம் முதலிய தசவர்க்கத்தினுலும், பாவகம் பன்னிரண்டினுலும், நவக்கிரக பாதசாரத்தினுலும் உண்டாகிய பலாபலம் உற்பாதம் தேகசுபாவம் மனேபாவம் முதலியவை சாதகஸ்கந்தமாம்.

இச் சாதகஸ்கந்தங்களி லொன்ருகிய பிதுர்பாவக மரிய விரும்புபவர்கள் மனம்-வாக்குக்காயங்களினலே கடவுளைத்தியானித்துத் துதித்து இந்தப் பிதுர்பாவகத்தை ஜாதகங்களுக்கு எடுத்துச் சொல்லுவார்களாகில் உலகிலுள்ளோர் யாவரும் ஒப்புக்கொண் டுள்ளமகிழ்வதோடு மற்ற பாவகங்களும் எடுத்துச் சொல்லுங்களென்று கேட்பதிற் சந்தேகமில்லை. இதைவாங்கி வாசித்துப்பார்த்தால் அதனுண்மை அவரவர்களுக்கே நன்கு விளங்கும். யாம் எடுத்துக்கூறில் தற்புகழ்ச்சியாமென விடுத்தனம். இதுநிற்க இந்நூலை அச்சிட்டுத் தரவேண்டுமென மிக்க முயற்சிசெய்த எட்டயபுரம் சமஸ்தானம் - ஜீவித ஏஜண்டும், கோவில்பட்டியில் க - ஆ - மு - ச - மளிகை வியாபாரமு முள்ள ம-ா-ா-ஸ்ரீ, க - ஆண்டியப்பபிள்ளை யவர்கள் விருப்பத்தின்படி அச்சிடலாயிற்று. அவர்கள்செய்த பேருதவியை என்றும் மறக்கத்தக்கதன்று.

இங்ஙனம்,

எம். சுப்பிரமணியபிள்ளை,

சோதிடம் நடுவப்பட்டி,

சாத்தூர் போஸ்டு.

உ

கெங்காபரமேஸ்வரி துணை.

# விளம்பரம்.

இதுவரை அச்சிடாத அருமையான அடியிற்கண்ட சோதிடசாஸ்திரங்கள் இப்பொழுது என்னால் ரிஜிஸ்தர்செய்து அச்சிடப்பெற்றிருப்பதால், என்னுடைய அனுமதியன்றியாரும் அச்சிடக்கூடாது.

இப்புஸ்தகங்கள் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்குத் தெரிவித்தால் வி-பி-மூலமா யனுப்பக்கூடும்.,

**சங்கராச்சாரிய சுவாமிகள்**

அருளிச்செய்த சோதிடம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மாதுர்பாவகம் | 1-க்கு | 0 | 12 | 0 |
| பிதிர்பாவகம் | 1-க்கு | 0 | 12 | 0 |
| சகோதரபாவகம் | 1-க்கு | 0 | 8 | 0 |
| களத்திரபாவகம் | 1-க்கு | 1 | 0 | 0 |
| புத்திரபாவகம் | 1-க்கு | 0 | 12 | 0 |
| யோகபாவகம் | 1-க்கு | 1 | 0 | 0 |
| ஆயுட்பாவகம் | 1-க்கு | 1 | 0 | 0 |
| இவ்வேழுபாவகமும் கலிகோபயிண்டு ஓரேகட்டடம் | 1-க்கு | 5 | 0 | 0 |
| ஜாதகசந்திரிகா என்னும் சந்திரகாவியம் நூதனவுரை | 1-க்கு | 0 | 8 | 0 |
| சுந்தரானந்தர் சூஷத்தில் கெற்பசிந்தாமணி ருதுநூல் | 1-க்கு | 0 | 12 | 0 |

வி - பி - சார்ஜ் பிரத்தியேகம்

இப்புத்தகங்கள் சோதிடர்களுக்கு மிகவும் உபயோகமுள்ளது.

இங்ஙனம்,

**எம். சுப்பிரமணியபிள்ளை,**

சோதிடம் நடுவப்பட்டி,

சாத்தூர் போஸ்டு.

உ

பரமபதிதுணை.

உலோககுருவாகிய

# ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சங்கராச்சாரியம் பன்னீராயிரத்தில்

# பிதிர்பாவகம்.

## பாயிரம்.

### கடவுள் வணக்கம்.

விநாயகர்.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்-உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

சுப்பிரமணியர்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேவர்குலப் பெருங் கமல மிடுக்க ஞான
திமிர மகன் றனியோடு சிறந்து வாழ
மாவலிசே ரவுணர்குலக் குவளை வாடி
மண்ணிலிடைச் சுருங்கியிட வந்த பானு
தூவடிவேற் குமரேச னடிய னேன் புன்
சொல்லினுக்கு மிரங்கியருள் சுரக்கும் பெம்மான்
பூவடியா மிருபோது மூன்று போதும்
பூசைபுரிந் தன்பினொடு புகழ்ந்து வாழ்வாம்.

### உமையவள்.

ஆதிபரம் பரையாகிச் சத்துச் சித்தோ
டானந்த மயமாகி யகண்ட மாகிச்
சோதி நிறை வடிவாகி மூலோங் காரச்
சுழி முனையின் கொழுந்தாகித் தோற்ற மான
வோதியபூ தாதிநிறை புவன மாகி
யுற்றசரா சரப்பொருளி னுண்மையாகிச்
சாதிகுலம் பிறப்பிறப்பு மூப்பொன் றில்லாச்
சத்திதுணைத் தாட்கமலந் தலைமேற் கொள்வாம்.

### சரஸ்வதி.

உருமகளை அயனுவி னுலறமகளைப் பொறைமகளை
யுலகுக் கெல்லாங்
குருமகளை யன்பர்புகழ் குலமகளை மலர்மகளைக்
குணங்கொள் செல்வத்
திருமகளின் மருமகளை நிலமகட்குங் கலைமகளைச்
செல்வி வாய்ந்த
ஒருமகளை யெனக்கருள வருமகளைப் பெருமகளை
யுன்னல் செய்வாம்.

### நூல்.

திங்களைச் சடையிற்சூடுஞ் சிவனருட் புதல்வனை
ஐங்கர னடியைப்போற்றி யவனரு ளகத்துட்கொண்டு
சங்கராச் சாரிபாடற் றுன்பனீ ராயிரத்தில்
இங்கிதப் பிதிரின்பாக மியம்புவோ மிகத்தினோர்க்கே.

பத்தில்வெண் மதிய னிருந்திட வவற்குப் பருதியுங் கேந்திர முறுமால், சித்தமாய்ச் சுபருங் கூடிடிற் செனனம் சிங்கமா யலவனு யமர்ந்தால், உத்தவன் றனக்கோ ரிருபதுமிரண்டி லுயர்பிதா வதனையுங் கொல்லும், புத்திசேர் மாதே யறிந்துரைத்திடுநீ புவியினில் மானிடர் தமக்கே. (க)

கன்மத்தா னத்தில் நின்றிடக் குருதி காரிமுன் பின்னதாயிருக்கிற், சென்மித்த தல்லா லன்னியர் தமக்குச் சேர்ந்திடுமேகமாங் கருமம், வன்மித்துப்பாம்பு கூடிடிலஞ்சு வருகர்மமாந் திவந் திடுகில், இன்மையன் னியரி லெய்திடுமேழென் றியம்பினராகம நூலோர். (உ)

வேறு.

பகையாகச் சூரியனுஞ் சுபருடனேன் றாகப்
பருதியுடன் சேர்ந்தகோ ளவன்வீட்டிற்பாவர்
துகையேக மாகவவர் முன்பின்னாற் பாம்பு
தோய்ந்திடவும் பெற்றபிதிர் தமக்கொருதிங்களிலே
இகலாகக் கொடிதான கசரோகங் காட்டும்
இணையங்க வீனமுட னெய்திடுமல்லாது
செகமீதி லவனுயுள் தீர்க்கமதா மெனவே
சேயரிக்கண் ணாயுரைநீ சோதிடநூற் றேர்ந்தே. (௩)

நாலின்கோள் சுபராகச் சுபரோடேசேர்ந்து
நண்ணிடவு மத்தானத் துடையோருஞ் சுபராய்ச்
சீலமதாய்க் கூடிடவே சூரியனு மதியுஞ்
சேர்ந்தடகை நீசமில்லா திருந்திடிகி லவர்க்குப்
பாலனைய மொழியாளே முப்பதின்மே லைந்திற்
பகர்தாயுந் தந்தையுமே வொன்றாக வெடுக்கும்
மேலெனவே வொருவர்பகை யுறுமாகி லவர்க்கு
மேதினியி லதன்மேலஞ் சாகுமென வுரையே. (௪)

வேறு.

ஆதவன் றனக்குப் பத்துளோன்மாலா யமர்ந்திட வாக்கு
மூன் றதனில், தீதவன் பருதிய வர்க்கு முன்பின்னாற் சேர்ந்திட
மதியும்மட் டமத்தில், நாதமாய்ச் செனித்தோன் றிங்களிற் பிதா
வும் நல்கிய மாதுரின் கருமஞ், சேதமா மெனவே வுரைத்திடட்
டமத்திற் சேயிருந் திடிலவ னேடாம். (௫)

வேறு.

சூரியனுஞ் சேய்வீட்டில் மாலோடேகத்
தோன்றுயிர்க்குச் சட்டம்விய மைந்திலாக
நேரிழையே நவமதனிற் பாவரேறி
நின்றவற்கு நட்பாட்சி யுச்சமாகில்
வீரியமா யவன்முன்னாற் பின்னாற்பாவர்
விளங்கிடவும் வாலிபமீ ராறுக்குள்ளாய்
பார்புகழத் தனையீன்ற பிதாவூர் விட்டுப்
பரமனருள் பெறநாடிச் செல்வான்றானே. (௬)

பகர்ந்திடுநீ தேசாதி தேசஞ் செல்லும்
பகர்வயதீ ரொன்பானுட் பிதாவும்போமால்
இகழ்ந்தவன்றன் கருமமிவற் குதவா தென்பர்
ஏந்திழையே மாதர்பகை தனையுண் டாக்கும்
உகந்தசென்மங் கன்னிமுதற் சதுரமாகில்
உத்தமமாம் சிலபலனிற் றவருதென்பார்
செகந்தனிலே யிவன்வயதோ ரைம்பத்தஞ்சிற்
சேருமெம லோகமவ னீன்றமாதே. (எ)

வே று.

பிதிருடைத்தானஞ்சுங்கன் பிறங்கிலமாகவக்கோள்
சதிருடன்பாவரோடு தரித்திடவதனிலாக
விதியுடன்கரிமால்வெய்யோன் விளங்குமோர்வீடதானல்
துதிபிதிர்நாற்பத்தொன்றிற் றுணிவுடன்கருமஞ்செய்வன். (அ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவெய்யோன்
சதிருடன்மதிமால்வெள்ளி சார்ந்திடப்பாவரோடு
விதியுடன்பருதிக்கோன்பான் வெய்யவன்வீடதானல்
துதிபிதிர்நாற்பத்தொன்றிற் றுணிவுடன்கருமமாதோ. (கூ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமஞ்சோன் சற்குருபுகர்மாலாக
விதிமுறைப்படியேவெய்யோன் விளங்கியபாவரோடு
மதியின்வீடதனிற்சேர்ந்தால் வகுத்தனர்தந்தைகர்மம். (கo)

தந்தைதாய்கருமஞ்செய்வன் சதிருடனிருபத்தேழு
விந்தையாயிரண்டுசென்றால் விதிமுறைப்படியேபோவன்
முந்தவேபிறந்தோன்கண்டம் முப்பதிலொன்றுதத்து
விந்தையாயொழியுந்தத்து மேலவர்மொழியென்றேதே. (கக)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்புந்தி
சதிருடனருக்கன்பூமன் சார்ந்திடவத்தானத்தோன்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவரோடிருப்பானுகில்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனரிருபத்தேழில். (கஉ)

பிதிருடைத் தானம் பொன்னன் பேரில்ல மாக வக்கோள்
சதிருட னருணன் வீட்டிற் றனித்திடச் சசியும் பாம்பும்
பதிபிதிர்க் குடையோ னேடும் பகர்ந்திட விருப்ப தானல்
துதிபிதிர் நாற்பத் தொன்றிற் றுணிவுடன் கருமஞ் செய்வன். ()

பருதியு மிடப மானாற் பகரலா மதன்கீ ழஞ்சிற்
கருதியே துலைப்பான் தந்தை கருமமே வுரைத்தார் மேலோர்
குருதிவீ டதனில் வெய்யோன் குருகிடத் தனிப்பா னாகிற்
சுருதியா யதன்கீழ்ப் பத்துத் துணிவுடன் துலைப்பான் தந்தை)

பிதிருடைத் தானம் மந்தன் பேரில்ல மாகக் காரி
பதிதனிற் றனிக்கச் சுங்கன் பருதிசே யருண னோடு
சதிருட் னிருப்ப தானாற் சாற்றின ரிருபத் தேழிற்
பிதிருட கருமஞ் செய்யப் பிறந்தனன் தரணி மாதோ. (கரு)

பிதிருடைத் தானஞ் சுங்கன் பேரில்ல மாகப் புந்தி
சதிருட னூர லோடு தரித்திட வதனி லாக
விதியுடன் புகர்க்கீ ராறில் வெய்யவன் மறைவ தானல்
துதிபிதி ரெர்ழியுங் கர்மங் தொகுத்தன ரருக்கன் வந்தால். (கசு)

மதிமகன் பருதி கேது வருமிட மறைவீ டாக
விதியுடன் பிதிர்த்தா னத்தில் விளங்கிடக் கரும நாதன்
சதிருடன் புகர்பொன் மாந்தி சாருமோ ரில்ல மானல்
துதிபிதிர் நாசங் காட்டுந் துணிவுட னீரெட் டேழில். (கஎ)

பிதிருடைத் தானம் மந்தன் பேரில்ல மாகப் பொன்னன்
சதிதனித் திடினு மக்கோள் சாரிடம் பாவ ரோடே
பதிபிதிர்க் குடையோன் வீட்டிற் பருதியு மானுஞ் சேர்ந்தால்
துதிபிதிர் முப்பத் தஞ்சிற் றுணிவுடன் நாசம் மாதோ. (கஅ)

மதிமக னுயிர்க்குப் பத்தில வந்திட வக்கோள் தானும்
சதியுடன் சுபராய்த் தோன்றித் தனித்திட மறையா தாகில்
விதியுடன் பிதிர்த்தா னத்தில் விளங்கிடப் பாவர் சேர்ந்தால்
மதியுடன் திசையிற் றந்தை மரணமென் றுரைத்தார் மேலோர்.

பிதிருடைத் தானம் வெய்யோன் பேரில்ல மாகப் பாம்பு
சதிதனித் திடினும் பத்தோன் சாரிடங் குருதி வீட்டில்
விதியுடன் கரிமால் வெய்யோன் விளங்கிடும் வீடதானல்
துதிபிதிர் பலனஞ் சானற் றுணிவுடன் கருமஞ் செய்வன். (உ0)

பிதிருடைத் தானங் காரி பேரில்ல மாக வக்கோள்
சதிருட னருக்கன் வீட்டிற் றரித்திடச் சசிபாம் போடு
கெதியுடன் பருதி பொன்னன் கேளவன் வீட்டில் வந்தால்
விதியுட னைம்பத் தெட்டில் விதித்தனர் தந்தை நாசம். (உக)

பிதிருடைத் தானம் வெள்ளி பேரில்ல மாக வக்கோள்
சதிருடன் பருதி யோடு சாரிடம் மறையா தாகில்
பதிபிதிர்க் குடையோன் வீடு பாரினிற் சுத்த மானல்
துதிபிதி ரிருநா லொன்றிற் றுணிவுடன் தந்தை நாசம். (உஉ)

பிதிருடைத் தானம் புந்தி பேரில்ல மாக வக்கோள்
சதிருடன் பாவரோடு தரித்திட வதனி லாக
விதியுடன் பருதி சுங்கன் விளங்கிடப் பவர்வீ டானல்
துதிபிதி ரொழியுங் கர்மங் தொகுத்தன ரிருபத்தொன்றில். ()

பிதிருடைத் தானம் புந்தி பேரில்ல மாக வக்கோள்
சதிருடன் சுபர்களோடு சாரிடம் மறையா தாகிற்
பதிபிதிர்க் குடையோன் ருனும் பார்க்கவ னில்லஞ் சேர்ந்தால்
துதிபிதி ரொழியுங் கர்மங் தொகுத்திடா னிருமூன் றுள்ளாய்.

சந்திரன் பருதி கேது சாரிடம் மறையா தாகில்
வந்துயிர் தனக்கொன் பானில் மதிமகன் புகர்சே யுற்றல்
விந்தையா யக்கோள் தானும் விளங்கிடம் பவர்வீ டானல்
சிந்தையா யிருபத் தேழிற் செத்திடும் பிதாவென் றேதே. (உரு)

பிதிருடைத் தானஞ் சுங்கன் பேரில்ல மாக வக்கோள்
சதிருடன் மால்பா னேடே சாரிடஞ் சுபர்வீ டானல்
பதிபிதிர்க் குடையோ னில்லம் பாழ்பட விருப்ப தானல்
துதிபிதி ரீரெட் டாறிற் றுணிவுடன் நாசங் காட்டும். (உசு)

பிதிருடைத் தானஞ் சுங்கன் பேரில்ல மாகத் திங்கள்
சதிதனித் திடினு மக்கோள் சாரிட மறைவ தாக
விதியுட னருக்கன் மாலும் விளங்குமோ ரில்ல மானல்
துதிபிதிர் முப்ப துக்குள் தொகுத்தனர் கரும மாதே. (உஎ)

பிதிருடைத் தானங் திங்கள் பேரில்ல மாக வக்கோள்
சதிருடன் பருதி வீட்டிற் றனித்திடப் பாவர் நோக்க
விதியுடன் புகர்மால் வெய்யோன் விளங்குகேந் திரமே யானல்
துதிபி திரொழியுங் கர்மங் தொகுத்திடு மருக்கன் னாளில். (உஅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனருக்கனேடு சாரிடம்மறைவதாக
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள்தனிப்பதானல்
துதிபிதிரொழியுங்கர்மங் தொகுத்திடுங்குருதிநாளில். (உகூ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
விதியுடன்புகர்மால்வெய்யோன் விளங்குமிக்கோட்களொன்றாய்
சதியுடன்பருதிவீட்டிற் சார்ந்திடப்பாவர்நோக்க [ச்
விதியுடனிருபத்தஞ்சில் விதித்தனர்தந்தைசாவாம். (௩௦)

மதிமகன்பருதிகேது மந்திரிபுகர்சேயொன்றாய்ச்
சதிருடன்பிதுர்தானத்திற் சாரிடம்மறையாதாகில்
விதியுடன்கிரணமாலி வீடுமேசுத்தமானால்
பதிதனில்வயதஞ்சாகப் பகர்ந்தனர்தந்தைநாசம். (௩௧)

தந்தையர்கிரகந்தன்னிற் சசிமகன்புகர்சேய்வெய்யோன்
வந்திடச்சுபர்கள்நோக்க மகிதனிற்பிறந்தசேய்க்கு
விந்தையாயிருந்தாலஞ்சில் விதித்தனர்பிதாவைக்கொல்லும்
மைந்தனுங்கருமஞ்செய்ய வகுத்தனர்கணிதநூலோர். (௩௨)

பரிகரிபுகர்மால்கேது பகருமிக்கோட்களொன்றாய்
அரிதுடன்பிதிர்த்தானத்தி லமர்ந்திடச்சுபர்வீடுற்றால்
விரிகுழல்மாதேகேளாய் விதித்தனரிருநாலாறிற்
பிரியமாய்பிதாவைக்கொல்லப் பிறந்திடுந்தரணிமீதே. (௩௩)

பானுவுங்கேதுமாலும் பார்க்கவனோடுசேர்ந்தால்
ஆனதோரருக்கன்வீட்டி லமர்ந்திடமறையாதாகில்
ஏனமாய்ப்பிறக்குஞ்சேய்க்கு இசைவுடனீரேழொன்றிற்
பானுவின்றிசையிற்றந்தை பகர்ந்தனர்நாசமாதோ. (௩௪)

இரவியுங்குருவுங்கேது மிந்துவும்புகர்மாலோடு
திரமுடன்பிதிர்தானத்திற் சேர்ந்திடமறையாதாகில்
சுரமுடன்புகர்மால்ரெண்டு துகையெனவந்தபோது
விரைவுடன்வெள்ளிவந்தால் விதித்தனர்மரணந்தந்தை. (௩௫)

சூரியன்புந்திசுங்கன் சோமனும்பாம்பினோடு
காரியுமொன்றதாகக் கதிரவன்வீட்டிற்சேர்ந்தால்
வீரியமுடனேஐம்பத் தஞ்சினில்விதித்தார்தந்தை
காரிதான்வருநாள்கர்மங் கருத்துடனுதவான்மாதே. (௩௬)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடுங்குருவீடானால்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவருஞ்சுபருஞ்சேர்ந்தால்
துதிபிதிர்குருசேயாண்டு துகையென்னவொழியுங்கர்மம். (௩௭)

மதிமகன்பருதிசுங்கன் வருமிடம்பிதுர்த்தானத்திற்
சதியுடன்தானநாதன் சாரிடம்பவர்வீடுற்றால்
விதியுடன்காரிசேயும் விளங்கிடச்சுபர்வீடானாற்
பதியுடன்மூப்பத்தேழிற் பகர்ந்தனர்மரணந்தந்தை. (௩அ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாம்போடேகிச் சாரிடஞ்சுபர்வீடுற்றால்
விதியுடன்புகர்மால்வெய்யோன் விளங்கிடப்பிதுர்த்தானத்திற்
சதியுடனிருப்பதானால் தந்தையர்நாசங்காட்டும். (௩௯)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாம்போடேகிச் சாரிடம்பவர்வீடுற்றால்
பதிபிதுர்க்குடையோனோடு பார்க்கவன்மாலொன்றானால்
துதிபிதுர்குருமாலாண்டு துகையெனநாசந்தந்தை. (௪0)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
விதியுடனுயிருக்காறில் விளங்கிடப்பெலமாவானால்
சதிருடன்மால்சேய்வெய்யோன் சாரிடமறைவதானால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொடுத்திடுமிருபத்தொன்பான். (௪க)

பருதியுமதியுங் குருவுமானுடனே பகர்ந்திடக் காரிமால் வீடால், குருதியும்பாம்பும் புகருடனென்றாய்க் குறுகிடத்தானமொன்பதனாற், சுருதியாயுதிக்குஞ்சாதகன்வயது துணிவுடன் நாலுமேழொன்றிற், கருதியதந்தை நாசமென்றுரைக்கக் கருத்துடன்சாதகன் பலனே. (௪௨)

மாலவன்குருதிபுகருடன்பாம்பு வருமிடம்பருதிவீடானால், நீலனுங்குருவுங் கேதுமம்புலியும் நின்றிடத்தானுமொன் பதனால், தூலமாய்ப்பிறக்குஞ் சாதகன்றனக்குத் துணிவுடன்நாலுமாறொன்றிற், பாலகன்றந்தை மரணமென்றுரைக்கப் பகர்ந்தனர் கணிதநூலாய்ந்தோர். (௪௩)

அருக்கனுங்குருவு மம்புலிமாலு மருக்கன்வீடதனிலே வருமால், சுருக்கமாய்ப்புகருங் காரிசேயோடு துணிவுடன்கோட்களொன்றாகத், தருங்குடனென்பான்தானம்வந்திடுமேல் சாற்றினுருதித்திடுஞ்சேய்க்கு, அருக்கன்மாலிரண்டு துகையெனத்தந்தையழிந்திடுஞ்சாதகன் பலனே. (௪௪)

நாலஞ்சுக்குடையோன் காரிமாலுடனே நல்கிடப்பானுவீ
டதனிற், சாலவேகுருவுங் கேதுசேயுடனே சாரிடங்கருமத்தா
னத்தில், ஏலவேவருமால் பிறந்திடும்பாலற் கெட்டுமாறெட்டி
னிற் றந்தை, தூலமாய்நாசம் வருமெனமேலோர் சொல்லினர்
சாதகன்றனக்கே. (சரு)

பருதிமால்வெள்ளியாரல் பாக்கியத்தானஞ்சேரக்
கருதியே அருக்கன்வீட்டிற் கடும்பவர்தனிப்பதானால்
வருமுயிர்தனக்குமுப்பத் தேழினில்மரணந்தந்தை
யுறுதியாய்க்கருமமென்றே வுரைத்தனர்சாதகற்கே. (சசு)

பிதுருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனருக்கனோடு சாரிடம்புகர்வீடானால்
அதிபிதுர்க்குடையோன்வீட்டி லந்தணன்தனிப்பானாகில்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்திடுமீரேழொன்றில். (சஎ)

பிதுருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
விதியுடன்கரியனோடு விளங்குகேந்திரமேயாகச்
சதிருடன்பருதிவீட்டிற் சசிபுகர்வருவதானால்
விதியுடனருணன்னாளில் விதித்தனர்தந்தைநாசம். (சஅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
பதிபிதுர்க்குடையோன்வீட்டிற் பகலவன்தனிப்பானாகில்
சதிருடன்குருசேயோடு சாரிடங்குசன்வீடுற்றால்
விதியுடன்பருதிநாளில் விதித்தனர்தந்தைசாவாம். (சகூ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
பதிபிதுர்க்குடையோனோடு பகலவன்வீட்டிலேகச்
சதிருடன்கருமந்தன்னிற் றனித்திடப்பவர்வந்துற்றால்
விதியுடன்முப்பத்தெட்டில் விதித்தனர்தந்தைநாசம். (ரு0)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்பானோடு சாரிடம்புகர்வீடானாற்
கெதியுடன்பருதிவீட்டிற் கேளவன்றனிப்பானாகில்
விதியுடன்சசிவந்துற்றால் விதித்தனர்தந்தைசாவாம். (ருக)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
கெதியுடன்கடுங்கோளோடு கேளவன்வீட்டிலேகப்
பதிபிதுர்க்குடையோனில்லிற் பானுசேய்புகர்வந்துற்றால்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனரிருபத்தெட்டில். (ருஉ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிபானேடு சாரிடங்குருவீடானற்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாம்புசேய்புகர்வந்துற்றால்
துதிபிதிர்கருமந்தன்னைத் தொகுத்தனர்கொடியோன்நாளில். ()

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிகேதோடு சாரிடம்மறைவதானல்
விதியுடன்பருதிவீட்டில் வெய்யவன்குருவந்துற்றால்
பதியுடனஞ்சேழொன்றிற் பாலகன்தந்தைசாவாம். (௫௬)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்கேதோடு சாரிடஞ்சனிவீடுற்றுப்
பதிபிதுர்க்குடையோன்றானும் பகரிடமறைவதானல்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனர்கதிரோன்வந்தால். ()

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
விதியுடனரவமோடு மேவிடமால்வீடாகச்
சதிருடனருக்கன்பொன்னன் சாரிடம்மறையாதாகிற்
கெதிபெறவைம்பத்தொன்றிற் கிளர்ந்திடும்பிதாவென்றோதே. ()

சூரியன்சேய்வீடாகித் தோன்றிடவதற்குநாதன்
சாருயிர்தனக்கஞ்சாகித் தரித்திடப்பாம்பினேடு
கூரிறையொன்பான்கோளன் குறுகிடமறையாதாகிற்
சீருடன்பாம்பிற்றந்தை செத்திடுங்குசனாளுணில். (௫௭)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சசிவீடாகப்
பதிபிதுர்க்குடையோன்றானும் பார்க்கவன்வீட்டில்வந்தால்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனர்மால்வந்துற்றால். (௫௮)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவெய்யோன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வீடுற்றுப்
பதிபிதுர்க்குடையோன்வீடு பாழ்படவிருப்பதானல்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனருதவான்மாதோ. (௫௯)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பொன்னன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமதனிலாக
விதியுடனருக்கன்கேது விளங்குகேந்திரமேயானற்
பதிதனில்வயதுமுப்பத் தஞ்சினிற்பாழாந்தந்தை. (௬0)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமதனிலாக
விதியுடன்பருதிபொன்னன் விளங்கிடமறையாதானால்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனருதவான்மாதோ. (சுக)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
விதியுடன்புகர்மாலோடு விளங்கிடப்பவர்வீடுற்றே
சதிருடன்காரியாறிற் சாரிடம்மறைவதானால்
பதிதனிலீராறொன்றிற் பகர்ந்தனர்தந்தைநாசம் (சுஉ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சசிமால்சுங்கன் சாரிடஞ்சுபர்வீடாக
விதியுடன்கருமந்தன்னில் விளங்கிடப்பவர்வந்துற்றாற்
பதிதனிலொன்றஞ்சுக்குட் பகர்ந்தனர்தந்தைநாசம். (சுங)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிதனித்திடினும்பத்தோன் சாரிடமதனிலானாற்
பதிபிதுர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள்வருவதானால்
துதிபிதுர்கருமந்தன்னைத் துணிவுடனுதவான்மாதோ. (சுச)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வந்துற்றால்
விதியுடன்கருமநாதன் விளங்கிடப்பெலமாவானாற்
பதிதனில்முப்பத்தேழிற் பகர்ந்தனர்தந்தைநாசம். (சுரு)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குப்பத்திற் றனித்திடச்சுபர்கள்நோக்கா
பதிபிதுர்க்குடையோனில்லம் பகருஞ்சுத்தமமேயானால்
துதிபிதுரொழியுமென்றே தொகுத்தனருதித்தவன்றே. (சுசு)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிதனித்திடினுங்காரி சாரிடமவர்க்கேழானாற்
பதிதனிற்பிறக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனர்தந்தைநாசம்
விதியுடன்பிறந்தவன்றே விதித்தனருலகிலம்மா. (சுஎ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்காறிற் றரித்திடவவருக்கேழில்
விதியுடன்கரிசேயானால் விதித்தனர்கணிதநூலால்
பதிதனிலுதித்தவன்றே பகர்பிதாவெமனூர்வாசம். (சுஅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிருடன்மதிசேயோடு சாரிடமவ்வீடாக
விதியுடன்பருதிசுங்கன் விளங்குகேந்திரமேயானால்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனரீரெட்டேழில். (சுகூ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
விதியுடன்புகர்கேதோடு விளங்கிடவீராருகச்
சதியுடனருக்கன்காரி சாரிடம்பெலமாவானல்
பதிதனிற்பதினுனுக்குட் பகர்ந்தனர்தந்தைநாசம். (எ0)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகப்புந்தி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சசிவீடாகி
விதியுடனட்டமத்தில் விளங்கிடப்புகரேயானல்
பதிதனிலிருநானுக்குட் பகர்ந்தனர்தந்தைசாவாம். (எக)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்மறைவதானல்
விதியுடன்பிதுர்க்குநாதன் விளங்கிடச்சுபர்வீடுற்றால்
துதிபிதுரிருமூன்றுள்ளாய்த் தொகுத்திடுந்தரணிமாதே. (எஉ)

புந்திசேய்கரிபானேடு புகர்மதிமால்வீடாக
வந்துயிர்தனக்கொஞ்பானில் வருஞ்சுபர்பவரோடானல்
விந்தையாய்ப்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனர்தந்தைகர்மம்
சிந்தையாயிருபத்தொன்றிற் செத்திடும்பிதாவென்றுரேதே. ()

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மால்வீடேகித் தரித்திடமறையாதாகில்
விதியுடன்குருமால்வெய்யோன் விளங்குகேந்திரமேயானல்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனரிருபத்தஞ்சில். (எச)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வீடுற்றால்
பதிபிதுர்க்குடையோன்றானும் பார்க்கவன்வீட்டிற்சேர்ந்தால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனரிருநாலஞ்சில். (எரு)

பாக்கியத்தானம்பொன்னன் பதிதனிற்றிங்கள்மைந்தன்
பாக்கியத்தானநாதன் பாவரோடிருப்பானகிற்
பாக்கியத்துடனேபத்து வயதினிற்றந்தைசாவாம்
பாக்கியத்திபனேடு பாவர்கள்சேராதானல். (எசு)

பிதிர் தனத்துடையோன்ருனும் பீதகன்வீட்டிற்சேரச்
சதிருடனதற்குநாதன் சாரவேஅருணன்வீடாய்க்
கதிரவன்வீட்டிற்பாம்பு கணக்கனும்வருவதானல்
துதிபிதுர்நாற்பத்தொன்றிற் றுணிவுடன்கருமஞ்செய்வன். ()

கரியவனருக்கன் மந்திரிபிருகு கணக்கனுங்கரியவன்வீடால் வருமதிக்குடையா னம்புலிமாந்தி மந்திரிவீட்டிலே சேர, அறுபதுவயதென்றுரைக்கலாமன்னை யையிரண்டாண்டிலேவொழிப்பான், தருதுடன்தந்தை கருமமேதொலைக்கச் சாற்றினர்முப்பதுமிரண்டில். (எஅ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகப்பாம்பு
சதிருடனருக்கன்வீட்டிற் றரித்திடக்காரிசுங்கன்
மதிமகனுடனென்ருகி மந்திரிமனையிற்சேர்ந்தால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனர்முப்பத்தைந்தில். (எகூ)

அருக்கனுநீசமாக ஆரனுமவ்வீடாக
இருக்கும்வீடதுவேசுங்க னில்லமாயிருக்கவேழு
அருக்கன்வீடதுவேயாக அந்தணன்காரிசேர்ந்தால்
சுருக்கமாய்த்தந்தைகர்மந் தொலைக்கலாமிரண்டைந்தொன்றில்.

சந்திரன்பாம்போடேகிச் சாரிடம்பருதிவீடாய்
வந்துயிர்தனக்கீராறில் மதிமகன்குருதிவந்தால்
முந்தவேபிறக்குஞ்சேய்க்கு மொழிந்தனர்வயதிரண்டில்
விந்தையாய்த்தந்தைநாசம் விதித்தனர்தரணிமாதோ. (அக)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்புந்தி
சதிருடனருக்கன்மைந்தன் சார்ந்திடவிருப்பதாகப்
பதிபிதுர்க்குடையோன்வீட்டிற் பாவர்களிருப்பதானல்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்திடான்முப்பத்தொன்றில். ()

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகக்காரி
சதிருடன்புகர்மால்வெய்யோன் சற்குருமதியினேடு
விதியுடனவ்வீடானல் விளங்கிடப்பிறந்தசேய்க்குப்
பதிதனில்வய்துதானேம் பத்தஞ்சிற்பாழாந்தந்தை. (அங)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாம்போடேகிச் சாரிடம்பருதிவீடாய்
விதியுடனருக்கன்புந்தி விளங்கிடமறைவதானல்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனரோராண்டுள்ளாய். (அச)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமுதையமாக
விதியுடன்காரிவெய்யோன் விளங்கிடமாலோடுற்றால்
துதிபிதிரிறைவன்வந்தாற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. (அரு)

மதிமகன்பருதிபொன்னன் வருமிடங்காரிவீடாய்ச்
சதியுயிர்க்கொன்பான்மாலோன் சாரிடஞ்சேய்வீடுற்றால்
விதியுடன்பாம்புநாளில் விளங்குமால்புசிப்புவந்தால்
துதிபிதுர்நாசங்காட்டத் தோன்றிடும்பிறந்தசேய்க்கே. (அசு)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்குருகேதோடு தரித்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடன்பருதிமாலும் விளங்குகேந்திரமேயானாற்
றுதிபிதிரிருபத்தொன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (அஎ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பருதிவீட்டிற் றரித்திடப்பாவரோடு
விதியுடனுயிர்க்குப்பத்தில் விரைவுடன்புகர்பொன்னுற்றால்
* துதிபிதுர்முப்பத்தாறிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (அஅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்கேதோடு சாரிடங்காரிவீடாய்
விதியுடன்பருதியாறில் விளங்கிடப்பாவர்பார்த்தால்
துதிபிதிர்வயதுநாலுட் டுஞ்சிடுந்தரணிமாதோ. (அகூ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
மதிதனித்திடினுமக்கோள் வருமிடங்குருவீடாகப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பருதியும்புகர்சேயுற்றால்
விதியுடன்பிதாவின்கர்மம் விளங்குமோராண்டுக்குள்ளாய். ()

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பருதி டாய்
மதிமகன்பருதியோடு வளருகேந்திரமேயானால்
துதிபிதுர்வயதுநாற்பத் தொன்றினிற்றொலையுமாதோ. (சுக)

---

* துதிபிதிரிறைவன்நாளிற் றுஞ்சிடுமருக்கனாணில்—என்றும் சில ஏட்டுப்பிரதிகளி லிருக்கிறது.

பிதிருடைத்தானம்வெள்ளி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பருதியோடு சாரிடங்காரிவீடாய்
விதியுடன்வயதுநாலில் விதித்தனர்தந்தைநாசம்
பதிதனில்வளருஞ்சேய்க்குப் பகர்ந்தனர்தரணிமாதோ. (கூஉ)

மால்கரிபருதிபொன்னன் வருமிடம்பிதிர்த்தானத்திற்
சால்வேஅக்கோளஞ்சிற் றரித்திடப்பவர்வீடானுற்
றாலமாய்வளருஞ்சேய்க்குத் துணிவுடனிருநாலேழிற்
பாலனும்பிதாவின்கர்மம் பண்ணுவன்தரணிமாதோ. (கூரு)

பரிகரிகுருதிகேது பகர்ந்திடப்பருதிவீட்டிற்
சரியுடனுயிர்க்கொன்பானுந் தரித்திடமவ்வீடானல்
துரிதமாய்வயதிரண்டிற் றுணிவுடன்பிதாவின்கர்மம்
விரிகுழலுமையாளாணே விதித்தனர்தரணிமாதோ. (கூச)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவெய்யோன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமருக்கன்வீட்டில்
விதியுடன்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனர்வயதோரேழிற்
றுதிபிதிரொழியுமென்றே தொகுத்தனர்கணிதநூலோர் (கூடு)

சூரியன்மாலோடாகித் தோன்றிடவுயிர்க்கீராறில்
ஒருயிர்தனக்குப்பத்தி லுயர்வுடன்சசிபாம்பானல்
பாரினில்வயதோரொன்றிற் பாழ்படும்பிதாவென்றேது
ஆரியனாணையாக அறைந்தனர்தரணிமாதோ (கூசா)

பருதிமால்கரியோடேகிப் பார்க்கவனில்லஞ்சேரக்
குருதியுங்குருவுங்கேது குருகிடப்பிதிர்த்தானத்திற்
கருதியேபிறக்குஞ்சேய்க்குக் கதிரவன்நாள்வந்துற்றால்
உறுதியாம்பிதாவைக்கொல்ல வுதித்தனன்தரணிமாதோ. (கூஎ)

மதிமகன்பருதிகேது வந்திடப்பிதுர்தானத்திற்
சதியுடனக்கோளெட்டிற் றரித்திடத்தனிப்பானுகிற்
பதிதனில்வயதோரேழிற் பகர்ந்தனர்பிதாவைக்கொல்ல
விதியுடனுதிக்குமென்று விதித்தனர்தரணிமாதோ. (கூஅ)

குருவுடன்காரிகேது குறுகிடப்பிதுர்த்தானத்தில்
வருமுயிர்தனக்குப்பத்தோன் வளருங்கேந்திரமேயானுற்
சுருதியாயுருக்கன்நீசந் தோன்றிடத்தனிப்பானுகிற்
கருதியேவயதுநாலிற் கருத்துடன்தந்தைநாசம். (கூகூ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
பதியுடனுயிர்க்கீராறிற் பதிந்திடவிறைவன்மாந்தி
விதியுடனிருப்பதானல் விதித்தனர்முப்பத்தொன்று
சதியுடன்மூன்றுஞ்சென்ருற் றந்தையர்நாசமாதோ. (க0ா)

வேறு.

பிதிருடைத்தானத்ததிபனுமருணன் பேரில்லமாகவேபிறீங்கச்
சதிருடனக்கோள்பாவரோடிருக்கத் தந்தையின் தானமேசுத்தம்
அதிபதியந்தக்காரகன்ருனு மஞ்சுநாலொன்பதிலிருந்தால்
துதிபிதிர்க்கருமந்துணிவுடன்செய்யச் சொல்லினரவனுடவயதோ

சொல்லிடும்வயதோ ரொன்பதுக்குடையோன் ஞேன்றிய திசைதனிலருக்கன், வெல்விதிப்படிநாள் வந்திடும்வயதில் விதித்தனர் தந்தைதுஞ்சிடவே, அல்லல்வந்தணுகுஞ் சஞ்சலமாகவறைந்தனர் சாதகன்றனக்குச், சொல்லினர்பெலமாய்ப் பூமிக்ஷேத்திரங்கள் தொகுத்திடுமரணநாள் வரையாம். (க0உ)

வேறு.

மதிமகன்வெள்ளிதிங்கள் மந்தனுமருக்கன்மாந்தி
சதியுடன்பிதிர்த்தானத்திற் சார்ந்திடவுதிக்குஞ்சேய்க்கு
விதியுடன்றந்தைசெல்வம் விளங்கவேநாசங்காட்டும்
பதிநிதிபூமிசெல்வம் பாழ்படவொழியுமாதோ. (க0ஙு)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பாவர்வீடால்
விதியுடன்மதிபொன்சுங்கன் விளங்கிடவதனிற்கோளன்
அதிகமாயருணனேடு அமர்ந்துடனிருப்பதானல். (க0ச)

தந்தையர்கருமஞ்சொல்வேன் சதிருடன்பதிமூன்ருறில்
விந்தையாய்நாசங்காட்டும் விதித்தனர்தரணிமாதோ
சிந்தையில்விசாரங்காணுஞ் சேதமென்றுரைத்தார்பூமி
முந்தவேபகையுண்டென்றே மொழிந்தனர்கணிதநூலோர். ()

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிரதாய்க்காரியோடு சாரிடமறையாதாகில்
விதியுடன்பருதிமாலும் விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிரீரொன்றேழிற் றெருகுத்திடுங்கருமமாதோ. (க0சு)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகத்திங்கள்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்மறைவதானால்
விதியுடன்தோன்றுஞ்சேய்க்கு விதித்தனர்மதிநாட்புந்தி
சதிருடனபகாரத்திற் சாய்ந்திடும்பிதாவென்றோதே. (க0எ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குமுன்பின் தரித்திடப்பாவரோடு
மதிமகன்பருதிகூட் வருமிடமறையாதாகில்
துதிபிதிரொழியுங்கர்மங் தொகுத்திடான்நாலேழஞ்சில். ()

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்மாலோடு சாரிடம்பவர்வீடாக
விதியுடன்மூக்கோள்தானும் விளங்கிடவுயிர்க்கீராறிற்
பதிதனிற்பிதாவின்கர்மம் பாலகனுதவான்மாதோ. (க0கூ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனருக்கனோடு சாரிடமறைவதாகில்
விதியுடன்மூக்கோள்நீசம் விளங்கிடச்சுபர்நோக்கானால்
துதிபிதிரேழாம்நாளிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (கக0)

சூரியன்வீட்டில்மாந்தி தோன்றிடக்கரிபொன்னோனும்
சாருமக்கோளன்மாறிச் சார்ந்திடவொன்பானோடு
சீருடன்வளரும்பாம்பிற் றிங்கள்வந்திடுகிற்றந்தை
ஆரியனாணையாக அழிவனென்றுரைத்தார்மாதோ. (ககக)

மாலுடன்காரிபானு வந்திடக்காரியில்லம்
தூலமாயுயிருக்கொன்பான் தோன்றிடச்சுபர்வீடானால்
பாலகன்வயதுபத்தே ழுஞ்சினிற்பிதாவைக்கொல்லச்
சாலவேயுதிப்பனென்று சாற்றினார்கணிதநூலோர். (ககஉ)

புந்தியும்பருதிகாரி பொருந்திடப்பானுவீடாய்
பந்திடுமுயிர்க்குப்பத்திற் பதிந்திடக்கொடியோன்வந்தால்
சிந்தையாயிருமூன்றுள்ளாய்ச் செப்பினர்பிதாவைக்கொல்ல
வந்திடுஞ்சிசுவென்றோத வகுத்தனர்தரணிமாதோ. (ககங)

வேறு.

சந்திரன்மால் காரியுடன் புகரொன்றாகத்
தரித்திடக்கேந்திரமாகிச் சுபர்நோக்காலும்
வந்திடுமக்கோள்தனக்கீ ராறில்வெய்யோன்
வரவுமக்கோளதனையே சுபர்நோக்குற்றால்

சிந்தையாயிலக்கினத்துக் கொன்பான்கோளன்
சேரிடமேசுபர்வீடாய்ப் பவர்வீடுற்ருல்
மந்தன்வருதிசைமுழுதில் மாதாதந்தை
மாய்ந்திடுமென்ருேதினர்கள் தரணிமாதோ. (ககச)

வேறு.

பிதிருடைத்தானம்மந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றனித்திடவருணன்வீடாய்
விதியுடன்புகர்மால்கேது வெய்யவனுதயமானல்
மதிகுசன்துகையாற்றந்தை மாய்ந்திடுங்கணிதமாய்ந்தோர். ()

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்கஞ்சிற் றரித்திடப்பாவர்நோக்க
மதிமகன்புகரெல்கேது வருமிடம்மறைவதானல்
துதிபிதிர்வயதோரொன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (ககரு)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மதியினேடு சாரிடமுதயமானல்
விதியுடன்புகர்மால்கேது வெய்யவனேர்வீடுற்ருல்
துதிபிதிர்வயதுமூன்றிற் றுஞ்சிடுங்கணிதமாய்ந்தோர். (ககஎ)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதியுடனுயிர்க்குப்பத்திற் றரித்திடப்பரிமாலோடு
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள்தனிப்பாராகில்
விதியுடன்வயதோரைந்தில் விதித்தனர்தந்தைநாசம். (ககஅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்காறிற் றனித்திடப்பாவர்நோக்க
மதியுடன்புகர்வெய்யோனும் வருமிடமறையாதாகில்
துதிபிதிர்முப்பத்தொன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (ககசு)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்காறிற் றரித்திடமதியினேடு
விதியுடன்புகர்மால்கேது வெய்யவன்மறையாதாகில்
துதிபிதிர்வயதுபத்திற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (கஉ0)

மாலவன்பருதிகேது வன்புகரிக்கோளொன்ருய்ச்
சாலவேவுயிர்க்கிரண்டிற் றரித்திடப்பாவர்நோக்க
நீலனுங்கருமத்தோனும் நின்றிடமறையாதாகில்
தூலமாயீரெட்டொன்றிற் றுஞ்சிடும்பிதாவென்ருேதே. ()

குருதிசேய்பருதிசோமன் கொடியவனுடனேன்ருகி
வருமுயிர்தனக்கொன்பானில் வந்திடச்சுபர்வீடானல்
கருதியேபிறக்குஞ்சேய்க்குக் கதிரவன்திசையிற்பாதி
உறுதியாய்ப்பிதாவைக்கொல்ல வுதித்தனன்தரணிமீதே. ()

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவெள்ளி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமருக்கன்வீடால்
பதிபிதிர்க்குடையோன்ருனும் பார்க்கவன்வீட்டில்வந்தால்
விதியுடன்பிதாவைக்கொல்ல விதித்தனர்குருநாட்பாதி. ()

பாதிநாள்வரினுமாகிற் பகர்ந்தனர்பிதாவைக்கொல்வன்
ஓதிடுமதிசேய்வெய்யோ னுயர்வுடன்கொடியனேடு
நீதமாய்ப்பிதிர்தானத்தில் நின்றிடப்பவர்வீடானல்
சேதமென்றுரைத்தார்தந்தை சேயுயிர்வயதோரெட்டில். ()

எட்டினிற்பிதாவின்கர்ம மெய்திடும்பிறந்தசேய்க்கு
மட்டிடும்பருதிபூமன் மந்திரிகாரியோடு
சட்டமாய்ப்பிதிர்த்தானத்திற் சார்ந்திடப்பவர்வீடுற்ருல்
திட்டமாய்வயதோராறிற் செத்திடும்பிதாவென்ருேதே. ()

ஓதுயிர்தனக்கொன்பானி லுயர்வுடன்பருதிபூமன்
பீதகன்காரிபுந்தி பெரும்பவருடனேசேர்ந்து
நீதமாய்ச்சுபர்வீடாகி நின்றிடவளருஞ்சேய்க்குச்
சேதமென்றுரைத்தார்தந்தை செப்பினர்வயதுமூன்றில். (கஉசு)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமவ்வீடாகிப்
பதிபிதிர்க்குடையோனுச்சம் பகர்ந்திடத்தனிப்பானுகில்
விதியுடன்வயதோர்நாற்பத் தஞ்சினில்விஷநோய்தந்தை. ()

தந்தையர்நாற்பத்தஞ்சிற் சாய்ந்திடும்பிறந்தசேய்க்குச்
சிந்தையாய்மதிமால்வெய்யோன் சிகியுடன்பெலமதானல்
விந்தைசேய்வயதீரெட்டில் மேவிடும்விஷத்தாற்றந்தை
வந்திடும்நாசமென்றே வகுத்தனர்கணிதநூலோர். (கஉஅ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகத்திங்கள்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்கரிவீடுற்ருல்
பதிபிதிர்க்குடையோன்ருனும் பகரிடம்பெலமதானல்
விதியுடன்வயதோரேழில் விளங்கிடும்பிதாவின்கர்மம். (கஉகூ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிமால்வெய்யோன் சாரிடஞ்சனிவீடானால்
விதியுடன்வயதுபத்து ரெட்டினில்விதித்தார்தந்தை
பதியதில்நாசமென்று பகர்ந்தனர்கணிதமாய்ந்தோர். (௧௫௦)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
பதிபிதிர்க்குடையோனோடு பகரிடஞ்சேய்வீடானால்
சதிருடன்பிறக்குஞ்சேய்க்குச் சாற்றினார்பிறந்தவன்றே
விதியுடன்பிதாவைக்கொல்ல விளங்கிடுந்தரணிமாதோ. (௧௫௧)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
அதிபவருடனொன்றாகி யமர்ந்திடக்கருமந்தன்னிற்
பதிபிதிர்க்குடையோன்றானும் பகரிடம்பெலமதானால்
சதிருடன்குருமாலாண்டு சாய்ந்திடும்பிதாவென்றோதே. (௧௫௨)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்காரி
மதியுடனாசான்வெள்ளி வந்திடப்பருதிவீட்டில்
விதியுடன்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனர்மதிமாலாண்டு
சதியுடன்துகையாய்வந்தாற் சாய்ந்திடும்பிதாவென்றோதே. ()

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகப்புந்தி
விதியுடன்கரிபொன்மாந்தி வெய்யவனாரலோடு
சதியுடனிக்கோளொன்றாய்ச் சார்ந்திடக்குருவீடானால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனர்வயதாண்டொன்றில். ()

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கிராறிற் றனித்திடப்பாவர்நோக்க
மதிமகன்பருதியொன்றாய் வருமிடம்மறைவதானால்
துதிபிதிரிருமூன்றஞ்சிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௧௫௫)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவெய்யோன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சுபர்வீடாகப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவருஞ்சுபர்வந்துற்றால்
துதிபிதிரோராண்டுக்குள் துணிவுடன்கருமஞ்சொல்லே. ()

சூரியன்காரிபுந்தி துணிவுடன்பிதிர்த்தானத்தில்
வீரியனுடனேசேர வேவக்கோள்நீசமுற்றால்
பாரிற்சேய்வயதொன்பானிற் பாழ்படும்பிதாவின்கர்மம்
ஆரியனாணையாக வறைந்தனர்தரணிமீதே. (௧௫௭)

மதிமகன்பருதிபொன்னன் வந்திடப்பிதிர்த்தானத்திற்
சதியுடனக்கோளாட்சி சார்ந்திடப்பவர்வீடுற்றால்
விதியுடன்வயதோரஞ்சில் விதித்தனர்தந்தைகர்மம்
சதியுடன்சடையோனாணை சாற்றினார்தரணிமாதே. (கஙஅ)

அருக்கனுஞ்சசியும்பொன்னு மமர்ந்திடப்பிதிர்த்தானத்திற்
சுருக்கமாயக்கோள்பத்திற் றோன்றிடப்பவர்வீடுற்றால்
தருக்குடனுதிக்குஞ்சேய்க்குச் சாற்றினார்பிதாவின்கர்மம்
அருக்கனார்வந்தபோதே அடைந்திடுந்தரணிமாதே. (கஙகூ)

சந்திரன்பருதிபொன்னன் சாரிடம்பிதிர்த்தானத்தில்
விந்தையாயக்கோள்பத்தில் விடையதிற்றனிப்பானுகில்
வந்தசேய்பிதாவின்கர்மம் வகுத்தனனீராறொன்றிற்
சிந்தையாயரன்மேலாணை திறமுடன்மொழிந்தார்மேலோர். ()

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாசப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வீடாக
மதியுடன்காரிவெய்யோன் வருமிடம்பெலமாவானால்
துதிபிதிர்மால்சேயாண்டு துகையதிலொழியுமென்னே. (கசக)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பொன்னன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்மறையாதாகிற்
பதிபிதிர்க்குடையோன்றானும் பகரிடம்புகர்வீடுற்றால்
துதிபிதிரிரண்டாண்டுக்குள் துஞ்சிடுந்தரணிமீதே. (கசஉ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவெய்யோன்
சதிருடன்மால்சேயோடு தரித்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடன்காரியுச்சம் விளங்கிடத்தனிப்பானுகில்
துதிபிதிர்பருதிதிங்கள் துகையதிலொழியுந்தந்தை. (கசங)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாவரோடு சாரிடமறைவதாக
விதியுடன்பருதிமாலும் விரைவுடன்சசிவீடுற்றால்
துதிபிதிர்வெள்ளியாண்டு துகையதிலொழியுமென்னே. (கசச)

பிதிருடைத்தானம்வெள்ளி பேரில்லமாகச்சுங்கன்
சதிதனித்திடினுமைந்தோன் சாரிடம்பெலமாவானால்
பதிதனிற்பிறக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனர்புகர்மால்காரி
மதிதுகையாகுமானால் வகுத்தனர்தந்தைகர்மம். (கசரு)

பிதிருடைத்தானம்வெள்ளி பேரில்லமாகவக்கோள்
விதியுடன்பருதிசுங்கன் விரைவுடன்மறைவதானல்
கெதியுடன்பிறக்குஞ்சேய்க்குக் கிட்டிடும்புகர்வந்துற்ருல்
துதிபிதிர்நாசங்காட்டத் தோன்றிடுந்தரணிமாதோ. (கசசு)

பருதியும்புகரும்பொன்னன் பகர்ந்திடப்பிதிர்த்தானத்தில்
குருதியுங்கரியுமாகக் குறுகிடப்பருதிகூடிற்
கருதியேபிறக்குஞ்சேய்க்குக் கதிரவன்புகர்சேயாண்டு
சுருதியாய்வளருமாகிற் றுஞ்சிடும்பிதாவென்ருேதே. (கசஎ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பொன்னன்
சதிருடன்மால்சேயோடு தரித்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடன்பருதிகாரி விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிர்க்குருதியாண்டிற் றுஞ்சிடுந்தரணிமீதே. (கசஅ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மால்வீடேகித் தனித்திடமறையாதாகில்
விதியுடன்கரிமால்வெய்யோன் விளங்கிடமறையுமானல்
துதிபிதிர்குருதிநாளிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (கசகூ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனரவமோடு சாரிடமறையாதாக
விதியுடன்பருதிசேய்மால் விரைவுடன்மறைவதானல்
துதிபிதிரீரேழுக்குள் துஞ்சிடுந்தரணிமாதோ. (கரு0)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினும்பொன்னன் சாரிடம்பவர்வீடாகப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பருதிமால்புகர்வந்துற்ருல்
விதியுடன்முப்பத்தொன்றில் விதித்தனர்தந்தைநாசம். (கருக)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவெய்யோன்
சதிதனித்திடினும்பொன்னன் சாரிடஞ்சேய்வீடாக
மதியுடன்காரிவெய்யோன் வளருகேந்திரமேயானல்
பதிதனிற்பிறந்தவன்றே பகர்ந்தனர்தந்தைநாசம். (கருஉ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினும்பொன்னன் சாரிடம்பருதியில்லாய்க்
கெதியுடனருக்கன்மந்தன் கேளவன்மறையாதானல்
பதிதனில்வயதோரெட்டிற் பகர்ந்தனர்தந்தைநாசம். (கருங)

வேறு.

சூரியன்றன்வீடதுவா யருணனோடு
தோன்றிடவேசுபபவர்கள் நோக்குமாகில்
பாருயிர்க்கொன்பான்கோளன் மூன்றுறெட்டிற்
பகர்ந்திடவேவுடனெருகோள் தரியாதானல்
கூறுமெனத்தோன்றியசேய் வளருந்தந்தை
குறுகுமொன்பான்றிசைதனதில் மரணங்காட்டும்
சூரியனுமறைந்துபகை நீசமானல்
தோன்றியநாள்நாற்பதனிற் றுலையுந்தந்தை. (கருச)

சூரியனுமானுடனே சேய்வீடேகத்
தோன்றியசேய்சுபருடனே மறையுமாகிற்
பாருயிர்க்கொன்பான்கோளன் மறையோடொன்றுய்ப்
பகருயிருக்குபயமதிற் றரிக்குமானல்
கூறுமெனமார்த்தாண்டன் றனக்கொன்பானின்
கோளன்வருந்திசையதனில் வளருந்தந்தை
சீருடனேவுயிர்தனக்குக் கருமனந்தி
செத்திடுமேயிதுதவறு தெனவென்றூரே. (கருரு)

மானுயிர்க்கொன்பான்கோளாய்க் கரியனில்லம்
வந்திடவேகரியனென்ப தஞ்சிலேகச்
சீலமுடன்வருமருக்கன் மறையோனில்லம்
சேர்ந்திடவேமறையனுயிர்க் காறிலானல்
சாலவேவருமரவு திசையிற்காரி
சாருமபகாரமதிற் பாதிதன்னிற்
காலனுடபட்டணஞ்சென் றேகுந்தந்தை
கருதுமென ஆகமநூல் வழியென்றூரே. (கருசு)

வேறு.

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கீராறிற் றரித்திடவலரிபாம்பு
விதியுடனிக்கோளொன்றுய் விளங்கிடப்பிறந்தசேய்க்குத்
துதிபிதிர்கருமநாளிற் றுஞ்சிடுமரவுவந்தால். (கருஎ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகக்காரி
தனித்திடினுமக்கோள் சசிமகன்மாந்திகேது

விதியுடனிக்கோளோடு விளங்குயிர்க்குபயஞ்சேர்ந்தால்
துதிபிதிரிருபத்தேழிற் றுஞ்சிடுங்கருமமேற்பன். (கடுஅ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குமூன்றிற் றனித்திடச்சுபர்நோக்கில்லா
மதிமகன்பருதியோடு வருமிடம்மறையாதானல்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தோன்றிடுமீரேழ்பத்தில். (கடுகூ)

வேறு.

மாந்திபுகருடனுயிர்க்கொன் பானிலேக
வருமதற்குநாதனுமே மறையுமாகில்
தேர்ந்துமதிவீடதனி லலரிகேது
சேர்ந்திடவேசுபர்பவர்கள் நோக்காதானல்
சேர்ந்துயிர்க்கொன்பான்கோளன் முடிவிற்றந்தை
செத்திடுமேயிதுதவரு தெனவென்றோது
மாந்திபுகர்கேதிரவி யோர்வீடானல்
வளருதந்தையவன்றனக்குக் கருமமேறுன். (கசூ0)

குருவுடன்பன்னகனுமுயிர்க் கொன்பான்தன்னிற்
குறுகவிவரிருந்திடுங்கோ ளதிபன்றானும்
வருமனைகள்சுபர்வீடாய்ப் பவர்கள்சேர
வளருமக்கோள்மறைந்திடக்கே துடன்வெய்யோனும்
சரியுடனிக்கோள்தனக்குக் கருமந்தன்னிற்
சசிவருகச்சசிதிசையிற் றன்னையீன்றோன்
அருமறைநூற்படிவிதியா லருணன்நாளில்
அழிந்துயிருங்காலனுல கடையுமென்னே. (கசூக)

சூரியன்தன்னுடன்கேது மால்வீடேகத்
தோன்றியமால்பிதிர்த்தானந் தன்னிற்றோன்றப்
பாரிலக்கினக்கோளும் பாம்போடொன்றாய்ப்
பகருயிருக்குபயமதிற் றரிக்குமானல்
கூறிலிந்தச்சேயதனை யீன்றதந்தை
குறுகனலிதிசைபாதி மரணங்காட்டுஞ்
சூரியன்றன்னுடன்கேது மறைந்துநீசந்
தோன்றிடவேநாற்பதனிற் றொலையுந்தந்தை. (கசூஉ)

வேறு.

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சேய்வீடாகித் தனித்திடநீசமாக

விதியுடன்பருதியாட்சி விளங்கிடத்தனிப்பானுகில்
துதிபிதிர்மரணஞ்சோமன் தோன்றியதிசையின்போக்கில். ()

வேறு.

அட்டமத்திற்சூரியன்மால் தரிக்கவக்கோள்
அம்புலிவீடதனில்வர மாந்தியொன்றுய்த்
திட்டமுடன்கேந்திரமா யுதயமாகச்
சேர்ந்தவருக்கஞ்சதனிற் றனிக்கவொன்பான்
சட்டமுடனிவன்றனக்கு முன்பின்சுத்தம்
சாரவொன்பான்வீடதனிற் பவர்வந்துற்றால்
மட்டாருங்குழலாளே சேயின்தந்தை
மாயுமிரண்டாண்டதனுட் கணிதஞ்செப்பே. (௧௬௪)

வேறு.

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்வீடேகித் தனித்திடப்பவர்நோக்கில்லா
விதியுடன்தேளில்வெய்யோன் விளங்கிடத்தனிக்குமாகிற்
பதிதனில்மரணந்தந்தை பகர்ந்தனர்பருதிவந்தால். (௧௬௫)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பருதிவீடாய்
விதியுடனிரவிமாலும் விளங்கிடமறையுமானால்
துதிபிதிரீரேழெட்டிற் றுஞ்சிடுந்தரணிமீதே. (௧௬௬)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறையாதாகில்
விதியுடனட்டமத்தில் வெய்யவன்மால்வந்துற்றால்
துதிபிதிரிருபத்தஞ்சிற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. (௧௬௭)

வேறு.

சூரியனும்மாலுடனே பிதிர்த்தானத்திற்
றோன்றிடவேபவரில்லம் வளருமாகிற்
காரிபவருடன்சேர்ந்து சுபர்வீடேகிக்
கருத்துடனேமதிமனையி லிருப்பதானால்
சீருடனேபிறந்திடுஞ்சேய் வயதஞ்சேழிற்
செத்திடுவனத்தனெனக் கணிதமோதும்
சூரியனுமாலுடனே மறைவதானாற்
றொருகுத்திடுமைம்பதுவயதிற் றுஞ்சுந்தந்தை. (௧௬௮)

## வேறு.

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிமாலோடு சாரிடம்மறையாதாகிற்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள்தனிப்பதானல்
விதியுடன்வயதிரண்டில் விதித்தனர்தந்தைநாசம் (கசுகூ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பருதிவீடால்
விதியுடன்கிரணமாலி விளங்குகேந்திரமேயானல்
பதிதனில்வயதோராண்டிற் பகர்ந்தனர்தந்தைகர்மம் (கஎ0)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்காரியோடு சாரிடமுயிரிற்சேர்ந்தால்
விதியுடன்வயதோரேழில் விளங்கிடுந்தந்தைகர்மம்
பதிதனிலுதிக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனர்கணிதநூலோர். (கஎக)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகவக்கோள்
சதியுடனுயிர்க்குப்பத்திற் சசிதனித்திருக்குமாகில்
விதியுடன்பருதிபுந்தி விளங்கிடமறைந்துநின்றல்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தொகுத்தனரிருபத்தாறில். (கஎஉ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுஞ்சுங்கன் சற்குருமறையாதாகில்
பதிபிதிர்க்குடையோன்றனும் பார்க்கவனில்லஞ்சேர்ந்தால்
துதிபிதிரொழியுங்கருமந் தொகுத்திடானிருபத்தொன்றில். ()

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவன்னேன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பருதிவீடால்
விதியுடன்பானுபுந்தி விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனணிறைவன்வந்தால். ()

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
விதியுடன்பருதிசோமன் விளங்குமிக்கோட்களொன்றய்ச்
சதிருடனுயிர்க்குப்பத்திற் சார்ந்திடப்பவர்வீடானல்
பதிதனில்வயதுநாலிற் பகர்ந்தனர்பிதாவைக்கொல்ல. (கஎரு)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்கேது
சதிருடன்பருதிவெள்ளி சற்குருவருணனேடு
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பதிந்துதான்வளருமாகில்
துதிபிதிர்கருமந்தன்னைத் துணிவுடன்செய்யான்மாதோ. (கஎசு)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகப்புந்தி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்கரிவீடாகப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாம்புசேய்மதிவந்துற்றால்
விதியுடன்விஷத்தாற்றந்தை வீதலாங்குருநாட்போனால். (கஎஎ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகத்திங்கள்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்வியத்திற்சேர
விதியுடன்கருமந்தன்னை விளங்கிடப்புகர்வந்துற்றால்
துதிபிதிர்புகர்நாள்தந்தை துஞ்சிடுமுலகிலம்மா. (கஎஅ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கிராறிற் றனித்திடநீசவீடால்
பதிபிதிர்க்குடையோனுச்சம் பகர்ந்திடத்தனிப்பானுகில்
துதிபிதிர்கருமநாளிற் றுஞ்சிடுந்தனதுபோக்கில். (கஎகூ)

வேறு.

மந்தனுடன்கொடியபவர் பருதியில்லம்
வளரவக்கோளுயிர்க்குபய மதனிற்சேரச்
சிந்தையுடனிலக்கினத்துக் கொன்பான்கோளன்
சேரிடஞ்சட்டாட்டவியந் தனிக்குமானால்
வந்திடுஞ்சேய்தந்தையுயி ரழியும்பொன்னன்
வருந்திசையிற்கரிவருநா ளதனில்மாயும்
விந்தையுடனொன்பான்கோள் மறையாதானால்
விளங்கியபொன்றிசைமுடிவில் மரணந்தந்தை. (கஅ0)

சுக்கிரனுங்கேந்திரமா யுயிர்க்கொன்பானுந்
தோன்றுமக்கோளொன்றாக மறையன்வீடால்
மிக்கதெனமால்பருதி கரியன்வீட்டில்
விளங்கிடவேசுபர்நோக்க விளங்குந்தந்தை
தொக்குமெனச்சூரியன்றன் றிசையிற்சுங்கன்
தோன்றியநாளபகாரம் மரணந்தந்தை
சுக்கிரனுமொன்பானு மறையுமானால்
தொல்புகர்வந்திடுந்தனதில் மரணந்தந்தை. (கஅக)

சந்திரனுமிலக்கினத்துக் கொன்பானுகிச்
சாரிடங்கேந்திரமாகிச் சுபர்கள்சேரப்
புந்திமனை தனிலருக்கன் மாந்திமாலும்
பொருந்திசுபர்நோக்காமற் புகரொன்பானுய்

வந்திடவேபுகர்திசையில் மரணந்தந்தை
வருத்தனர்கள்பாம்புடநாள் வருமுற்பாதி
சந்திரனும்பாவருடன் மறையுமானல்
சாய்ந்திடுஞ்சேய் தந்தையர்தன் கருமஞ்சேரான். (கஅஉ)

வே று.

சூரியன் பிதிர்த்தானத்திற் ஞேன்றிடமாலோன்பானும்
காரியுமொன்ருய்நிற்கக் கருதியசேய்தன்தந்தை
கூறினர்பரிநாள்வந்தாற் குறுகிடுமெமலோகத்திற்
சூரியன்வேருவானுற் றுஞ்சிடுந்தனைப்பெற்றன்றே. (கஅங)

வே று.

சனியவனும் கேந்திரமாய்த் தனிக்கவொன்பான்
சாரவவ ருடனரவு தரிக்குமாகில்
இனிதமுட னுயிரதனிற் பருதிசுங்க
னிருந்திடவே யிவர்கடனைச் சுபர்கள்நோக்கக்
கனிவெனவே தோன்றியசேய் வளர்க்குந்தந்தை
கர்மமுமே கரிவருநாட் டிசையின்போக்கில்
சனியவன்ற னுடனரவு மறையுமானுற்
சாய்ந்திடுமே ஓர்வயதில் மரணந்தந்தை. (கஅச)

வே று.

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடனிரண்டாறெட்டிற் றரித்திடப்புகர்பொன்மாந்தி
விதியுடனிவர்களொன்ருய் விளங்கிடவலரிநேசம்
துதிபிதிரிருநாலொன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (கஅடு)

மறையவன்பிதிர்த்தானத்தில் வந்திடவதற்குநாதன்
விரைவுடனிரண்டாறெட்டில் விளங்கவெச்சுபர்களேனும்
உறையநற்பருதியுச்ச மூர்ந்திட்டப்பாவர்சேர்ந்தால்
தரையிற்சேயீன்றவத்தன் சாதலுமிருபத்தேழில். (கஅசு)

சந்திரன்புகர்மாலொன்ருய்த் தரித்திடப்பிதிர்த்தானத்தில்
வந்திடவக்கோள்தானும் மறைந்திடச்சுபர்கள்நோக்கா
சிந்தையாய்க்கருமந்தன்னிற் றினகரனரவோடுற்ருல்
விந்தையாய்ப்புகர்நாள்வந்தால் விதித்தனர்தந்தைநாசம். ()

ஆரல்கேந்திரத்திலாக அம்புலியொன்பானேடு
சாரவேசுபர்நோக்கில்லாத் தரித்திடப்பகையால்வெய்யோன்
பாரினில்வருஞ்சேய்தந்தை பாழ்படுங்கருமமேற்கான்
ஆரனுமறையுமாறு லழிந்திடுமுபயநாளில். (கஅஅ)

சூரியன்மறைமாலொன்பான் றேன்றுமிக்கோட்களொன்ருய்ச்
சாரிடமொன்றேழ்பத்திற் றரித்திடப்பாவர்நோக்கா
பாரினில்வருஞ்சேய்தந்தை பாழ்படுமைம்பத்தொன்றிற்
சூரியன்மறைமாலொன்பான் றேன்றுமிக்கோட்கள்சேரும். ()

சேரிடமுயிர்க்காறெட்டிற் றிகழ்பனிரண்டுதன்னிற்
கூறினர்முக்கோள்தானுங் குறுகிடப்பிறந்தசேய்க்கு
ஆரியனணையாக வறைந்தனர்பிதாவைக்கொல்லச்
சீருடனிருபத்தொன்றிற் செப்பினர்கணிதமாய்ந்தோர். (ககூ0)

வேறு.

சந்திரனுமிலக்கினத்துக் கொன்பானுகிச்
சனியுடனேசேய்கூடி யுதயமேறப்
புந்திமனை தனிலருக்கன் மாந்திமாலும்
பொருந்திசுபர் நோக்காமற் புகரொன்பானுய்
வந்திடவேபுகர்திசையில் மரணந்தந்தை
வகுத்தனர்கள்பாம்புநாள் வருமுற்பாதி
விந்தையுடன்புகர்திசையந் தியத்திற்றெத்து
விளங்கியதோர்பிதாமரணங் கணிதஞ்செப்பே. (கசுக)

வேறு.

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்புகர்வீடுற்றால்
விதியுடனருக்கன்மாலும் விரைவுடன்மறையாதாகில்
துதிபிதிர்கருமஞ்செப்பத் தோன்றிடும்வயதோரேழில். (கசுஉ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமால்வீடேகப்
பதிபிதிர்க்குடையோனேடு பார்க்கவன்மறையாதாகில்
விதியுடன்வயதோரைந்தில் விதித்தனர்தந்தைநாசம். (கசுங)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றரித்திடப்பாவர்நோக்க

விதியுடன்புகர்மால்வெய்யோன் விரைவுடன்மறைவதானல்
துதிபிதிர்மால்சேயாண்டு துகையெனவொழியுந்தந்தை. (௧௯௪)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பூமன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்மறைவீடாக
மதியுடனருக்கன்புந்தி வளருங்கேந்திரத்தில்வந்தாற்
றுதிபிதிர்மால்சேயாண்டு துகையெனவொழியுந்தந்தை. ()

சந்திரன்பருதிபூமன் சற்குருகாரியோடு
வந்துயிர்தனக்கோன்பானுய் வந்திடப்பவர்வீடாகச்
சிந்தையாய்ப்பிறக்குஞ்சேய்க்குத் திறமுடன்வயதோர்மூன்றிற்
சந்தரத்துடனேதந்தை துஞ்சிடுந்தரணிமீதே. (௧௯௬)

மதிமகன்பாம்போடேகி வருமிடம்மறையாதாகிற்
சதியுடனுயிர்க்கீராறிற் றனித்திடப்பருதிவந்தால்
பதிதனிற்ரேன்றுஞ்சேய்க்குப் புகர்ந்தனரீறெட்டாறுள்
விதியுடன்பிதாவைக்கொல்ல விதித்தனர்கணிதமாய்ந்தோர். ()

சூரியனுயிர்க்கீராறிற் ரேன்றிடவொன்பான்கோளன்
சாரிடஞ்சசிவீடேகித் தனித்திடச்சுபரோடாறு
சீருடன்ரேன்றுஞ்சேய்க்குச் செப்பினர்பிதாவின்கர்மம்
ஆரியனணையாக வறைந்தனருதவான்மாதோ. (௧௯௮)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்பொன்னன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறையாதாகில்
விதியுடன்பருதிகேது விளங்கிடமறைவதானல்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடுந்திசைமுன்பாதி. (௧௯௯)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
மதிமகனிரவிகாரி வக்கிரன்கேதோடொன்றுய்
விதியுடன்புகர்மால்வீடாய் விளங்கிடப்பிறந்தசேய்க்குத்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடுங்குருதிவந்தால். (௨௦௦)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
விதியுடன்சுபரோடொன்றுய் விளங்கிடமறையாதாகிற்
பதிபிதிர்க்குடையோனுட்சி பகர்ந்திடப்பாவர்சேர்ந்தால்
சதிருடன்பிதாவைக்கொல்லச் சாற்றினர்கரிவந்துற்றுல். (௨௦௧)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குமூன்றிற் றனித்திடச்சுபர்நோக்கில்லா
பதிபிதிர்க்குடையோனுறிற் பகர்ந்திடவுயிரோன்சேர்ந்தால்
விதியுடன்பிதாவைக்கொல்ல விதித்தனரீராறெட்டில். (உ0உ)

சூரியன்மால்சேயொன்ருய்த் தோன்றிடச்சேய்வீடாகச்
சாருயிர்தனக்கொன்பான்கோள் தனித்திடப்பிதிர்த்தானத்திற்
சீருடன்கருமநாதன் சேரிடந்தன்வீடானல்
கூறினர்மறைநாள்தந்தை குறுகிடும்பருதிவந்தால். (உ0௩)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
விதியுடனுயிர்க்குமூன்றில் மேவிடமுன்னேனேடு
சதியுடனஞ்சிற்பானு தரித்திடப்பவரோடானல்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தோன்றிடாதென்றுசொல்லே. ()

சூரியன்புகரோடொன்ருய்த் தோன்றிடமுதயமாகச்
சீருடன்மதியுமொன்பான் சேரிடமறைவதாகக்
கூறிடும்பிதிர்த்தானத்திற் குருதியுங்கேதுஞ்சேர்ந்தால்
மாறிடும்பாம்பிற்றந்தை மாய்ந்திடுங்காரிகாலம். (உ0௫)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்கைந்திற் றரித்திடப்பவமில்லாதால்
விதியுடன்பரிமால்சேயும் விளங்கிடக்கரிவீடானல்
துதிபிதிர்கரிநாள்வந்தாற் றுஞ்சிடுந்தரணிமீதே. (உ0௬)

மாதவர்மொழியாற்பாம்பு வருங்கருமத்தோனேடு
நீதமாயோர்வீட்டகி நின்றிடமறையாதானல்
ஓதிடுங்கருமநாதன் றிசைதனிலுறையும்பாம்பிற்
சேதமென்ருேதுந்தந்தை செப்பினர்நாசமாதோ. (உ0௭)

சூரியன்மாலோடொன்ருய்த் தோன்றிடஞ்சசிவீடாகக்
காரியுமொன்பான்கோளுங் கருத்துடனோர்வீடுற்ருற்
சீருடன்ரேன்றுஞ்சேய்க்குச் செப்பினரரவுநாளிற்
கூறினர்தவத்திற்றந்தை குறுகிடுந்தரணிமாதோ. (உ0௮)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்குருவீடாகப்
பிதிர்தனக்குடையோன்வீட்டிற் பீதகன்தனிப்பானுகில்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனரென்றுகூறே. (உ0௯)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாவரோடு சாரிடமறையாதாகில்
விதியுடன்பருதிபூமன் விளங்குமோரில்லமானுற்
றுதிபிதிரிருநால்மூன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (உ௧0)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சுபர்களோடு சாரிடம்மறைவதாகிற்
பதிபிதிர்க்குடையோனேடு பாவருஞ்சுபருஞ்சேர்ந்தால்
துதிபிதிரிருபத்தெட்டிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (உ௧௧)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
விதியுடன்சுபர்களோடு விளங்கிடமறையாதாகிற்
சதிருடனருக்கனேடு தரித்திடச்சுபர்வந்துற்றுற்
பதிதனில்முப்பத்தெட்டிற் பகர்ந்தனர்தந்தைநாசம். (உ௧உ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வீடாக
விதியுடன்பருதியோர்வீ டதனிலேமறையாதானல்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்திடான்பதினெட்டாண்டில்.

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வீடாக
விதியுடனலரிபூமன் விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனர்வயதேழுக்குள். (உ௧௪)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகச்சுங்கன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமால்வீடாக
மதிமகன்பருதியோடு வருமிடமோர்வீடுற்றுல்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடும்புந்தியூணில். (உ௧௫)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகக்காரி
சதிருடன்பாம்போடொன்றுய்த் தரித்திடப்பிதிர்த்தானத்தில்
மதிமகன்கிரணமாலி வருமிடமோர்வீடுற்றுல்
விதியுடன்பிதாவைக்கொல்ல விதித்தனரிராகுநாளில். (உ௧௬)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றனித்திடப்பாவர்நோக்கப்
பதிபிதிர்க்குடையோனுட்சம் பகர்ந்திடச்சுபரில்லாதால்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடுந்திசைவந்துற்றுல். (உ௧௭)

சூரியன்வீட்டிற்காரி தோன்றிடப்பாம்போடொன்ருய்ச்
சாருமக்கோளனுச்சந் தனித்திடச்சுபர்நோக்கில்லாச்
சீருடனுயிருக்கொன்பான் சேரிடமறைவதாணுற்
கூறினர்கரிநாள்போக்கிற் குறித்தனர்பிதாவின்கர்மம். (உகஅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிருடன்குருவோடொன்ருய்த் தரித்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடன்பருதியொன்பான் விளங்கியேயோர்வீடுற்ருல்
துதிபிதிர்மூன்ருண்டுள்ளாய்த் துஞ்சிடுந்தரணிமாதோ. (உகக)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
மதிமகன்பரியோடொன்ருய் வருமிடம்புகர்வீடாகச்
சதிருடன்கரிக்கோறிற் றரித்திடமுக்கோள்வந்தால்
விதியுடன்பிதாவின்கர்மம் விதித்தனனுதவான்மைந்தன். (உஉ0)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பவர்வீடாகித் தனித்திடமறைவதாகப்
பதிபிதிர்க்குடையோனேழிற் பகர்ந்திடத்தனிப்பாணுகில்
துதிபிதிர்புகர்நாள்வந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (உஉக)

சூரியன்வீட்டிற்காரி தோன்றிடச்சுபரோடொன்ருய்ச்
சாருமக்கோள்பொன்வீட்டிற் றனித்திடச்சுபர்நோக்கில்லாச்
சீருடன்குளிகன்றிங்கள் சேரிடமுயிர்க்கொன்பாணுற்
கூறினர்புகர்நாள்வந்தாற் குறித்தனர்பிதாவைக்கொல்வன். ()

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மால்கேதோடு சாரிடங்கரிவீடாகில்
விதியுடனுயிர்க்கிரண்டில் விளங்கிடச்சுபர்நோக்குற்ருல்
துதிபிதிர்புகர்நாள்மாலிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (உஉ௩)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்குருவும்பானுஞ் சாரிடமறையாதாகில்
விதியுடன்கரிசேய்மாந்தி விரைவுடன்பரிவீடுற்ருல்
துதிபிதிர்மறையோனுண்டிற் றுஞ்சிடுங்காரிநாளில். (உஉச)

பிதிருடைதானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
விதியுடன்மால்கேதோடு விளங்கிடக்கரிவீடாகச்
சதிருடனிக்கோள்தன்னைச் சற்குருநோக்காதாகில்
துதிபிதிர்புகர்நாள்மாலிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (உஉ௫)

மாதவர்மொழியாற்புந்தி வரும்பரிகேதைமாந்தி
வேதமாய்விழியால்நோக்கில் விளங்கியசேய்தன்றந்தை
போதவேமனதிற்றுக்கம் பொருளழிவலைச்சல்சேதம்
ஓதினர்பெலமாய்நூலோ ருரைத்தனர்புகர்நாட்பாதி. (உஉ௬)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்புகர்வீடாகி
விதியுடன்புகர்மாலொன்றாய் விளங்கிடப்பிறந்தசேய்க்குத்
துதிபிதிர்பருதிவந்தாற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. (உஉ௭)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகச்சுங்கன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்குருவீடாக
விதியுடன்கருமநாதன் விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிர்வயதுமூன்றிற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. (உஉ௮)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகப்பொன்னன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்புகர்வீடாக
மதிமகன்சேயும்பாம்பும் வருமிடமறையாதானற்
பதியிற்சேய்வயதுபத்திற் பகர்ந்தனர்பிதாவின்கர்மம். (உஉ௯)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சேய்வீடாக
விதியுடன்பரிமால்கேது விளங்கிடமறைவதானல்
துதிபிதிர்புகர்நாள்வந்தாற் றுஞ்சிடுந்திசைமுற்பாதி. (உ௩0)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகமந்தன்
சதிருடன்குளிகனென்றாய்த் தரித்திடப்பிதிர்த்தானத்தில்
மதிமகனிரவிகேதும் வருமிடமுதயமானல்
துதிபிதிர்பருதிவந்தாற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. (உ௩க)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாவரோடு சாரிடமறையாதாகில்
விதியுடன்பருதிமாலும் விரைவுடன்சுபர்வீடுற்றால்
பதிதனிற்பிதாவின்கர்மம் பாலகனுதவான்மாதோ. (உ௩உ)

ஆரலுமொன்பான்கோளு மம்புலிபுகரோர்டொன்றாய்
ஒருயிர்தனக்கிரண்டி லுறையவொன்பானும்பாம்பும்
சீருடன்பரிமால்மாந்தி சேரிலக்கினம்வந்துற்றாற்
கூறினர்பாம்பின்போக்கிற் குறித்தனர்பிதாவின்கர்மம். (உ௩௩)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மதிசேயொன்றாய்ச் சாரிடமுதயமாக
விதியுடன்பரிமால்மாந்தி விரைவுடன்மறையுமாகில்
துதிபிதிர்குருநாள்வந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௩௪)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறையாதாகிற்
பதிபிதிர்க்குடையோனோடு பானுவுஞ்சுபர்கள்சேர்ந்தால்
விதியுடன்புகர்வீடுற்றால் விதித்தனர்பிதாவின்கர்மம். (௨௩௫)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
விதியுடன்சுபர்வீடாக விளங்கிடச்சுபர்கள்நோக்கப்
பதிபிதிர்க்குடையோன்வெள்ளி பகர்மனைதனிப்பானாகிற்
சதிருடனரவின்போக்கிற் சாய்ந்திடும்பிதாவென்றோதே. (௨௩௬)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்மாலொன்றாய்ச் சாரிடமால்வீடாகப்
பதிபிதிர்க்குடையோன்பத்திற் பகர்ந்திடத்தனிப்பானாகில்
துதிபிதிர்மறையிற்சுங்கன் றோன்றியநாளில்நாசம். (௨௩௭)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகத்திங்கள்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்கரிவீடாகப்
பதிபிதிர்க்குடையோனீசம் பகர்ந்திடத்தனிப்பானாகில்
துதிபிதிர்குருதிவந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௩௮)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்றன்வீடாகித் தனித்திடப்பவர்நோக்குற்றால்
விதியுடன்பருதிசோமன் விளங்கிடமறைவதானால்
துதிபிதிர்மாலோன்வந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௩௯)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
விதியுடனுயிர்க்குநாலில் விளங்கிடத்தனிப்பானாகிற்
பதிபிதிர்க்குடையோனேழிற் பகர்ந்திடச்சுபரோடுற்றால்
துதிபிதிர்மாலோன்வந்தாற் றுஞ்சிடுந்தரணியாதோ. (௨௪0)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குப்பத்திற் றனித்திடச்சுபர்வீடாக
மதியுடன்பருதியொன்றாய் வருமிடமறையாதானால்
விதியுடன்பிதாவைக்கொல்ல விதித்தனர்வயதோரைந்தில். ()

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கிரண்டிற் றரித்திடப்பவர்நோக்குற்றால்
பதிபிதுர்க்குடையோன்நீசம் பகர்ந்திடத்தனிப்பானுகில்
துதிபிதிர்கருமஞ்சொல்லத் தோன்றிடுமெதிநாட்போக்கில். ()

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரியோடொன்றாய்ச் சாரிடம்மறையாதாகிற்
கதிரவனிரண்டாந்தானங் கலந்திடத்தனிப்பானுகில்
துதிபிதிர்கருமந்தன்னைச் சொல்லினரிருநாலைந்தில். (௨௬௩)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பருதியோடு சாரிடம்மறையுமாகில்
விதியுடன்மதிவீடாகி விளங்கிடப்பிறந்தசேய்க்குத்
துதிபிதிர்கருமந்தன்னைத் துணிவுடனுதவான்மாதோ. (௨௬௪)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மறையோடொன்றாய்ச் சாரிடம்மால்வீடாக
விதியுடனக்கோளாறில் விளங்கிடப்பரிவந்துற்றால்
துதிபிதிரெட்டிற்றந்தை துஞ்சிடுந்தரணிமாதோ. (௨௬௫)

சூரியன்சேயோடொன்றாய்த் தோன்றிடவுதயமேறச்
சாருயிர்க்கொன்பான்கோளன் சாரிடமுயிர்க்காறுற்றால்
சீருடன்வருஞ்சேய்தந்தை செத்திடுங்குருநாள்வந்தால்
ஆரியனாணையாக அறைந்திடுந்தரணிமாதோ. (௨௬௬)

மாதவர்மொழியாற்செப்ப வகுத்தனர்கெணிதமாக
ஓதுயிர்தனக்கொன்பானி லுயர்குருபுந்திதிங்கள்
வேதமாய்விழியால்நோக்கில் விளங்குஞ்சேயின்றதந்தை
போதவேதனவான்யார்க்கும் புகழ்பெறவளருமாதோ. (௨௬௭)

சூரியன்பாம்போடொன்றாய்த் தோன்றிடவுயிருக்காறிற்
சாரிடம்பரிவீடாகித் தரித்திடக்காரியொன்பான்
சீருடன்பிதிர்த்தானத்திற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்குக்
கூறினர்வயதுநாற்பத் தொன்றினிற்குறுகுந்தந்தை. (௨௬௮)

சூரியனுயிர்க்கீராறிற் றோன்றிடவொன்பான்கோளன்
சாரிடங்கரிவீடாகித் தரித்திடப்புகர்மாலொன்றாய்ச்
சீருடன்சுபர்நோக்காமற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்குக்
கூறினர்மால்நாள்போக்கிற் குறுகிடும்பிதாவென்றோதே. (௨௬௯)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சேயோடொன்றாய்ச் சாரிடஞ்சுபர்வீடாகப்
பதிபிதுர்க்குடையோன்நாளிற் பகர்ந்திடக்கரிமாலுற்றால்
துதிபிதிர்புகர்நாட்போக்கிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௫௦)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சசிமகன்புகர்பான்கேது
விதியுடனிக்கோளொன்றாய் விளங்கிடமறையுமாகில்
துதிபிதிர்வயதீராறிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௫௧)

மாதவர்மொழியாற்கேது மதிமகன்புகர்மால்திங்கள்
வேதமாயிக்கோளொன்றாய் விளங்கிடமுதயம்வந்தாற்
சேதமென்றுரைத்தார்தந்தை செத்திடும்வயதுமுப்பான்
ஓதிடுநாளிற்கர்ம முரைத்தனர்தரணிமாதோ. (௨௫௨)

மந்தனுங்குருமால்சுங்கன் வரும்பரியொன்பானொன்றாய்
வந்துயிர்தனக்குநாலில் வளர்ந்திடச்சுபர்நோக்கில்லாச்
சிந்தையாய்வருஞ்சேய்தந்தை செத்திடுங்கணிதஞ்செப்ப
விந்தையாய்ப்புகர்நாள்வந்தால் விதித்தனன்தரணிமாதோ. ()

பிதிருடைத்தானம்மந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கேழாகித் தரித்திடமதியொன்றாக
விதியுடன்புகர்பான்கேது விரைவுடன்குருவீடுற்றால்
துதிபிதிர்மாலோன்நாளிற் றோன்றிடமுடிவில்மாயும் (௨௫௪)

பிதிருடைத்தானம்மந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பரிமாலோடு சாரிடம்புகர்வீடானால்
விதியுடன்தோன்றுஞ்சேய்க்கு விதித்தனர்பிதாவின்கர்மம்
பதிதனிலுதவானென்றே பகர்ந்தனர்கணிதமாய்ந்தோர் (௨௫௫)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகச்சுங்கன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்புகர்வீடாகப்
பதிபிதிர்க்குடையோன்றானும் பகரிடம்மறையாதானால்
துதிபிதிர்புகர்முற்பாதி துஞ்சிடுந்தரணிமாதோ. (௨௫௬)

மந்தனுமொன்பான்கோளும் மதிமகன்புகர்பொன்வெய்யோன்
வந்துமிக்கோட்களொன்றாய் வருமிடம்மறையாதாகில்
விந்தையாயுயிர்க்கொன்பானில் விளங்கிடப்பவர்வந்துற்றால்
சிந்தையாய்ப்புகர்நாள்சேயிற் செத்திடும்பிதாவென்றோதே. ()

மாலவன்புகர்பொன்பானு வக்கிரன்கேதோடொன்றாய்ச்
சாலவேவுயிர்க்கிராறிற் றரித்திடச்சுபர்வீடாக
ஏலவேபிதிர்த்தானத்தி லிந்துசுன் தரிக்குமாகிற்
றாலமாய்மால்நாட்பாம்பிற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. (உ௫அ)

காரிசேய்மால்பொன்னென்றாய்க் கதிரவன்வீட்டிலேகச்
சூரியன்புகர்கேதோடு தோன்றிடமுயிர்க்கொன்பானிற்
கூறினர்பிதாவைக்கொல்லக் குறித்தனரிருநாலஞ்சில்
ஆரியனணையாக அறைந்தனர்தரணிமாதோ. (உ௫௯)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்பானேடு சாரிடமூன்றுறெட்டில்
விதியுடன்தரிக்கக்கோளே விளங்கியபவர்நோக்குற்றால்
துதிபிதிர்புகர்நாள்தந்தை துஞ்சிடுமருணன்வந்தால். (உ௬0)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்நீசமாகித் தரித்திடமூன்றாக
விதியுடன்பருதிசேயும் விளங்கிடமாலோடானால்
பதிதனிற்பிதாவின்கர்மம் பாலகனுதவான்மாதோ. (உ௬௧)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமதிவீடாக
விதியுடன்பருதிபுந்தி விளங்கிடவுயிர்க்கெட்டானல்
துதிபிதிர்கருமந்தனைத் துணிவுடனுதவான்மாதோ. (உ௬உ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாம்போடொன்றாய்ச் சாரிடந்தன்வீடாக
விதியுடன்பிதிர்க்குநாதன் விளங்கிடமால்வீடுற்றால்
துதிபிதிர்மதிநாள்தந்தை துஞ்சிடுங்காரியூணில். (உ௬௩)

சூரியனென்பான்கோளுந் தோன்றுயிர்தனக்கொன்பானிற்
சீருடன்சுபர்வீடாகிச் சேர்ந்திடப்பாவர்நோக்கக்
காரியும்பருதிவீட்டிற் கலந்திடப்பன்னேன்வீடால்
கூறியேவருஞ்சேய்தந்தை குறுகிடுமிருபத்தேழில். (உ௬௪)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
மதிமகன்பானுமொன்றாய் வருமிடம்மறையாதானல்
பதிபிறந்திடுஞ்சேய்தந்தை பாழ்படுமரவுநாளில்
துதிபிதிர்பருதிவந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (உ௬௫)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சேய்வீடாகி
விதியுடன்புகர்பானென்றாய் விளங்கிடமறைக்காறுற்றால்
துதிபிதுர்க்கருமம்பொன்னன் றோன்றவன்றனதுபோக்கில். ()

சூரியன்றன்வீடதுவாய்க் கரிபொன்மாந்தி
தோன்றுமிக்கோள்மறைந்திடவே அதற்குநாதன்
சாருமுயிர்க்குப்பயமதிற் றரிக்கவக்கோள்
சாரவதற்குடையோனுஞ் சாருமில்லம்
பாருயிரிற்பாவருட னுயிர்க்கொன்பானும்
பதிந்திடப்பாருலக மதினுதிக்குஞ்சேய்க்கு
காரிவருந்திசையதனிற் பருதிவந்தாற்
காரிகையேபிதாமரணங் கருமமென்றே. (உ௬எ)

என்றெனவேயிலக்கினத்துக் குபயந்தன்னி
லிருந்திடுமோர்த்தாண்டனும்நீ:சமதாயரல்
நன்றெனவேவுடன்கூடித் தரிக்குமாகில்
நலிந்திடுமாறுங்கோளன் றிசைவந்தெய்துந்
தொன்றெனவேவுயிர்தனக்குக் கருமநாதன்
தோன்றிடவந்தபகார முடிவிற்றந்தை
கொன்றுயிர்விட்டேகிடுமே நமலோகத்திற்
குறித்தனர்கள்வெகுசிசமென் றோதுமென்றே. (உ௬அ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பொன்னன்
சதிதனித்திடினுமக்கோள் சசிமகனரவோடொன்றாய்த்
துதிபெறக்கேந்திரத்திற் றோன்றிடப்பருதியுச்சம்
விதியுடன்நாசந்தந்தை விதித்தனர்மால்நாட்போக்கில். (உ௬௯)

சூரியன்மால்கேதோடு மூன்றுறெட்டிற்
றோன்றிடவேபவர்வீடாய்த் தரிக்கவிக்கோள்
காரியுடனென்பான்கோள் புகரின்வீட்டிற்
கலந்திடக்கேந்திரமாகித் தரிக்குமாகிற்
பாருயிர்க்கொன்பான்மனேயி லரவுபொன்னன்
பகரிருவரிருந்திடுங்கோள் தனக்கொன்பானிற்
கூறினர்களிக்கோட்கள் தனிக்குமாகிற்
கூறியநாட்டிசைமுடிவில் மரணந்தந்தை. (உஎ0)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றனித்திடப்பாவர்நோக்க
விதியுடனக்கோள்தானும் விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிரவுநாளிற் றுஞ்சிடும்பருதிவந்தால். (உஎக)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிசேயொன்றுய்ச் சாரிடங்காரிவீடால்
விதியுடன்பருதியஞ்சில் விளங்கிடச்சுபர்நேர்க்குற்றுல்
துதிபிதிரவுநாளிற் றுஞ்சிடும்பருதிவந்தால். உஎஉ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மால்பான்வெள்ளி சற்குருவுடனென்றுகி
விதியுடனுயிர்க்குப்பன்னேன் விளங்கிய தானம்வந்தால்
துதிபிதிர்வயதோரொன்றிற் றுஞ்சிடுங்கணிதமாய்ந்தோர். ()

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மால்பான்வெள்ளி சற்குருவுடனென்றுகி
விதியுடன்மூன்றுறெட்டு விளங்கிடப்பதினென்றுனல்
துதிபிதிர்புகர்நாள்வந்தாற் றுஞ்சிடுந்தனதிற்பாதி. (உஎச)

பாதியேமரணந்தந்தை பகர்ந்தனர்கணிதமாய்ந்தோர்
நீதியாய்ப்பிதாவூர்பூமி நேர்ந்திடும்புகர்நாள்மாலில்
வேதமாய்வளருந்தந்தை விளங்கியபதிவந்தெய்தும்
ஓதிஞருமையாளாணே யுரைத்தனர்தப்பாதென்றே. (உஎரு)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பொன்னன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்கரிவீடாக
விதியுடன்பிதிர்க்குநாதன் விளங்கிடமறையுமானல்
துதிபிதிர்குருநாள்வந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ (உஎசு)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
மதியுடன்சேர்ந்தொன்றுகி வருமிடங்கரிவீடாகச்
சதிருடன்பருதிவெள்ளி சாரிடம்மறையாதானல்
விதியுடன்மரணந்தந்தை விதித்தனர்கரிநாள்போதில். (உஎஎ)

சூரியன்கரிமாலொன்றுய்த் தோன்றிடவுயிர்க்குநாலோன்
சீருடன்சுபர்நோக்காமற் சேர்ந்திடஞ்சுபர்வீடாகக்
கூரியவொன்பான்கோளன் குறுகிடம்நீசமானல்
ஆரியனுணே தந்தை யழிந்திடுமுதவான்பாலன். (உஎஅ)

வேறு.

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்கரிவீடாக
விதியுடன்வெய்யோன்புந்தி விளங்கிடத்தனிப்பானுகில்
துதிபிதிர்கருமம்பாம்பு தோன்றியதிசையின்போக்கில். (உஎகூ)

வேறு.

மதிமகன்குருதி வரும்பரியுடனே வருமனையுயிர்க்கொன்ப தானுல், விதியுடனக்கோள் புகர்மனையதனில் விளங்கிடமறைந் திடாதிடுகில், சதிருடன்புகரோன் வளருகேந்திரமாய்த் தனித் திடக் குருமனையானுல், துதிபிதிர்கருமந் தோன்றிடுமெதியிற் சுங் கன்வந்திடுமெபகாரம். (உஅ0)

வேறு.

மாலுடனேசூரியனும் புகரினில்லம்
வந்திடவேமால்பரிக்கு நாலஞ்சேழிற்
சீலமுடனுென்பதுக்கு வளருங்கோளன்
சேர்ந்திடவேசுபர்களிலே வளருமாகில்
பாலனுதித்திடுமுன்னே கருமமெய்தும்
பதிந்திடுங்கோள்பாம்புமதி பன்னுென்றற்ருல்
காலனுமேமைகைக்கொள்வா னின்ருேன்றன்னைக்
காரிதிசையரவுபுத்தி கண்டுகொள்ளே. (உஅக)

வேறு.

மதிமகன்பருதி வளரிடம்மறையாய் வழங்கியகோளனுக் கஞ்சேழ், சதிருடனுென்பான் றனித்திடமறையச் சார்ந்தவீடதி பனுமறைந்தால், விதிவழியதனு லறையுமோர்வயதில் விளங்கிய தந்தையுநாசம், பதிதனில்வளருஞ் சேயுமேயந்தம் பழகியகரு மமேவுதவான். (உஅஉ)

புந்திசூரியனும் பொருந்துகேந்திரமாய்ப் பொருந்தியபுந்தி சூரியற்கு, வந்துநாலஞ்சேழ் தானமாய்மறையோன் வளங்கிய வொன்பதுக் குடையோன், விந்தையாயுடனுென் ருகிடவுறை யும் விளங்கியநாதனு மறைந்தாற், சிந்தையாய்வளருங் கரிதிசை புகர்நாள் சேயவன் றந்தைசெத்திடுமாம். (உஅங)

சூரியன்காரி யொன்பதுக்குடையோன் ரூேன்றியகோட்க ளொன்ருகிக், காரிவீடதனிற் கலந்தவர்க்காறிற் கருதியபாம்பு வந்திடுமால், கூறிடவருஞ்சேய் தன்னையீன்றத்தன் குறுகிடுங் கூத்தனூரேகச், சீருடனரவு திசையில்முற்பாதி செப்பியபாதி யிற்பாதி. (உ௮௪)

வே று.

சூரியனுமறையாம லுயிர்க்கொன்பானிற்
  றூேன்றிடவேஅதற்குடையோன் சுபரதாகிச்
சாருமனைமறைந்திடவே வுடன்மால்பாம்பு
  தரித்திடவேகரிமனையாய் வரினுமாகிற்
பாரதனிற்பிறந்திடுஞ்சேய் தந்தைகர்மம்
  பகருவேன்கணிதநூற் படியதாக
ஆரியன்மேலாணையென வழியுமென்றே
  அறைந்தனர்நாலொன்றுவரும் வயதில்மாதோ. (உ௮௫)

வே று.

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமுன்பின் சாரவேதரியாதாக
மதிமகன்புகர்பான்திங்கள் வருமிக்கோளுதயம்வந்தால்
விதியுடன்மரணந்தந்தை விதித்தனர்கரிநாட்போக்கில். (உ௮௬)

வே று.

சூரியனுமாலுடனே புகர்வீடாகத்
  தோன்றுபுகர்கேந்திரத்தி லுதயமேறப்
பாருயிர்க்கொன்பான்வீடு பாழாய்நிற்கப்
  பகரவதற்குடையோனும் பகையாய்நீசஞ்
சீருடனேயிவன்றனக்கே வுபயந்தன்னிற்
  சேர்ந்திடக்கேதாகிடவே திகழுந்தந்தை
கூறினர்களிலக்கினக்கோள் திசையிற்கேது
  குறுகியநாள்நாசமெனக் கெணிதமோதே. (உ௮௭)

வே று.

பிதிருடைத்தானமாமல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சுபர்களோடு சாரிடமறையன்வீடால்
மதிமகன்பருதியொன்ருய் வருமிடங்கரி டானல்
துதிபிதுர்பரிநாள்தந்தை துஞ்சிடுங்கருமநாளில். (உ௮௮)

வேறு.

சூரியன்மாலொன்பான்கோள் கருமன்வெள்ளி
தோன்றுமிக்கோளோர்மனையாய்ச் சுபர்கள்வீடாய்ப்
பாருயிர்க்குமறையாமற் றரிக்கவிக்கோள்
பகராவிக்கொன்பானிற் சுத்தமானல்
கூறுபுகர்திசையதனிற் புகர்க்கொன்பானிற்
குறுகுமக்கோளபகார முதலேதந்தை
பாரதனில்வருஞ்சிவிகை யோகனுகப்
பகர்ந்தனர்கள்கணிதசோ திடநூலோரே. (உஅகூ)

நூலதனிற்பாலகனை யீன்றதந்தை
நுவல்வயதோரிருபத்தா றதனில்மாயும்
சீலமறைஆகமசாஸ் திரங்கள்நூலாற்
செப்பினர்களிதுதவறு தெனவென்றோது
நீலனுமொன்பான்கோளன் புகர்மால்வெய்யோன்
நேர்ந்துமிக்கோளோர்மனையாய் மறையுமானல்
காலனுடபட்டணஞ்சென் றேகுந்தந்தை
கருதியசேய்பிறந்திடுமென் றுடனென்றோதே. (உகூ0)

சூரியனீரஞ்சாங்கோ ளுடனொன்றாகித்
தோன்றுமதிவீடதனிற் றரிக்குமாகில்
பாருயிர்க்கொன்பான்வீடு புகரேயாகப்
பகருமொன்பான்கேந்திரமாய்ச் சுபர்வீடேகச்
சாராவிக்கொன்பதனி லரவுசேரத்
தப்பியதோர்சேயதனை யீன்றவத்தன்
ஆரிருகோள்திசைமுடிவில் மரணங்காட்டும்
ஆரணங்கேகருமத்துக் குதவுவானே. (உகூக)

சூரியனுங்கரிமனையிற் றனிக்கவக்கோள்
தோன்றுயிர்க்கீரஞ்சாங்கோ ளுடனொன்றாகிச்
சாருயிர்க்கொன்பான்மனையிற் றரிக்கவொன்பான்
தானுமேசட்டாட்டத் தானஞ்சேர்ந்தால்
சீருடனேதோன்றிடுஞ்சேய் தன்னையீன்றோன்
தென்புலஞ்சேர்ந்திடும்விதியைக் கெணிதமாகக்
கூறினர்கள்வயதிருநா லுபயந்தன்னிற்
குறுகிடுமேவருங்கரும மேற்குமாதே. (உகூஉ).

மாதேகேள்வருமுயிர்க் கொன்பதனிற்கேது
வந்திடவேஅதற்குடையோன் மறைவீடேக
ஓதுமெனவொன்பான்கோள் தனக்கொன்பானில்
உயர்வுடன்மால்சூரியன்சே யரவுசேர்ந்தால்
நீதியுடனொன்பான்கோள் தனக்கெட்டோன்றன்
நேர்திசைவந்திடுந்தனதிற் சேயீன்றத்தன்
வேதமொழிப்படியெனவே மரணமென்று
விதித்தனர்களாகமசாத் திரங்கற்ரோரே. (உசுரு)

வேறு.

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்பானோடு தரித்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடன்கருமக்கோளன் விளங்கிடம்நீசமுற்றால்
துதிபிதிர்கருமன்நாளிற் றுஞ்சிடுந்தனதுபோக்கில். (உசுச)

மாலுடன்பருதியொன்பான் வருமிக்கோளோர்வீடேகிச்
சீலமாய்ப்பிதிர்த்தானத்திற் சேயுடனரவுசேர்ந்தாற்
றாலமாய்வரினுந்தந்தை துஞ்சிடுமொன்பான்கோளன்
நீலன்வந்திடுநாட்போக்கில் நிகழ்த்தினர்கணிதமாய்ந்தோர். ()

காரிசேய்பருதியொன்பான் கருதுமிக்கோட்களொன்றாய்ச்
சீருடன்பிதிர்த்தானத்திற் சேர்ந்திடப்பவர்நோக்கில்லா
கூறிடவருஞ்சேய்தந்தை குறுகிடுமொன்பான்நாளில்
மாறியேபருதிவந்தால் மாய்ந்திடுந்தரணிமாதோ. (உசுசு)

வேறு.

பொன்னவன் புகர்மால்வெய்யோன் பொருந்துமொன்பானுமொன்றாய், மின்னியபிதிர்த்தானத்தில் விளங்கிடச்சுபர்நோக்கில்லா, அன்னமேதோன்றுஞ்சேய்க்கே அறைந்தனரொன்பான் நாளில், துன்னியபருதிவந்தாற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. ()

வேறு.

புந்தியுடன்சேய்புகரு மிவர்களொன்றாய்ப்
பொருந்துயிர்க்கொன்பான்கோளன் வீட்டிலேகி
வந்திடவேஅதற்குடையோன் கரியனில்லம்
வருங்கரியனிவருக்கே யூழாகுமாகில்

விந்தையுடன்வருங்கொடியோன் பருதியோடு
விளங்குயிர்க்குமறையாமற் றரிக்குமானல்
சிந்தையுடன்பருதியா றிரட்டியொன்றிற்
செத்திடுமேவருந்தந்தை கருமமேறுன். (உ௯அ)

தியாகுமிலக்கினத்துக் கொன்பான்வீட்டிற்
றரித்திடமால்சூரியன்சே யரவுமொன்பான்
விதியாகவுட்னிவர்கள் கூடியொன்றாய்
விளங்குமதிதனக்கெனவே மறையாதானல்
துதிபெறவேவொன்பான்கோள் தனக்கேயெட்டோன்
தோன்றுதிசையந்தியமாய் வரினுந்தந்தை
அதிபதியாய்மரணமென்று கெணிதமாய்ந்தோ
ரன்றந்தனர்கள்வருங்கரும மேறுன்மாதே. (உ௯௯)

வேறு.

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவெய்யோன்
சதிருடன்கரிமால்பத்தோன் சாருமிக்கோட்களொன்றாய்
விதியுடன்பிதிர்த்தானத்தில் விளங்கிடவொன்பான்கேந்த்ரம்
துதிபிதிர்கருமன்நாளிற் றுஞ்சிடுங்கரிநாட்போக்கில். (௩00)

வேறு.

சந்திரனும்புந்தியுடன் பிதிர்தானத்திற்
றரித்திடவேபிதிர்தானத் துடையநாதன்
வந்துபுகராகிமறை யோன்றன்வீட்டில்
வளருமொருகோனுடனே தரியாதாகச்
சிந்தையுடன்வரும்பருதி யீரஞ்சேகிச்
சேர்ந்திடவேதோன்றியசேய் வளருந்தந்தை
சுந்தரமாய்வயதிருவே ழுஞ்சின்மேலாய்த்
துஞ்சிடுமேதப்பாது கணிதமோதே. (௩0க)

சூரியன்மால்வீடதனிற் றனிக்கவக்கோள்
தோன்றுயிர்க்கொன்பான்கோளன் கருமன்பாம்பு
சாருமிக்கோளொன்றாகி மறையாதாகி
தரித்திடவேயிவர்கடனே மறையோன்நோக்கச்
சீருடனேவொன்பான்கோள் திசையில்வெய்யோன்
சேர்ந்திடும்நாள்முடிவதனி லீன்றவத்தன்

பாருயிர்விட்டேகிடுமே எமலோகத்திற்
பகருமிதைக்கணிதவழி யறிந்துசெப்பே. (௩0உ)

கரியுயிர்க்கொன்பான்கோளாய்க் கருமனோடு
கருதுதயகேந்திரத்திற் றரிக்குமாகில்
வருமுயிர்க்கிராறதனிற் பருதியுச்சம்
வந்திடவேஅதற்குடையோ னதனிற்சேர்ந்தால்
சரியுடன்தோன்றிடுஞ்சேயை யீன்றவத்தன்
தனக்குமேஇவன்கரும மேற்கானுகும்
தருமுயிர்க்காறதிற்பருதி நீசமானாற்
சார்ந்திடுஞ்சேயோர்வயதிற் சாயுந்தந்தை. (௩0௩)

சூரியனுங்கேந்திரமாய் நீசமேறித்
தோன்றிடவேவுடனொருகோள் சுபர்கள்சேரச்
சாருமிக்கோளிருந்திடும்வீ டதிபன்றானுஞ்
சந்திரன்பாம்புடன்குளிகன் பரிவீடேகிக்
கூருமெனவொன்பான்கோ ளுதயமேறிக்
குறுகிடவேஉச்சமவர் தனிக்குமானல்
சூரியன்வந்திடுமதிபன் றிசையிலொன்பான்
றோன்றுமபகாரம்வரில் நாசந்தந்தை. (௩0௪)

வேறு.

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சேய்வீடாக
விதியுடனதற்குநாதன் விளங்கிடவுடன்வந்துற்றால்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடுமெதிநாள்வந்தால். (௩0௫)

வந்திடுங்கனவான்றந்தை வகுத்தனரதிநற்பூமி
சிந்தையாய்வருமென்றோதிச் செப்பினர்கணிதமாய்ந்தோர்
சுந்தரப்படியிப்பூவிற் றோன்றியசேய்க்குச்செல்வம்
வந்தநாள்முதலேதொட்டு வரவரவுயர்ந்தவாழ்வே. (௩0௬)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மால்சேய்பானு சற்குருவுடனொன்றாகி
விதியுடனுயிர்க்குமூன்று றெட்டில்வீற்றிருக்குமானல்
துதிபிதிர்பதினறுக்குள் துஞ்சிடுந்தரணிமாதோ. (௩0௭)

சூரியன்புகர்மால்சேய்பொன் தோன்றுமிக்கோட்களொன்றாய்ச்
சாருயிர்தனக்கீராறிற் றரித்திடச்சுபர்நோக்கில்லாச்
சீருடனென்பான்கோளன் சேரிடமுயிர்க்கேழுற்றால்
கூறினர்வயதேழொன்றிற் குறுகிடும்பிதாவென்றோதே. (ருoஅ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
விதியுடனுயிர்க்கீராறில் விளங்கிடவக்கோள்தானும்
மதிமகன்புகர்பொன்பானும் வருமிடம்பன்னொன்றானல்
சதிருடன்பத்தேழொன்றிற் சாய்ந்திடும்பிதாவென்றோதே. ()

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சேயோடொன்றாய்ச் சாரிடங்கருமன்வீடாய்
விதியுடன்பிறந்தசேய்க்கு விளங்குநற்றந்தைதானும்
பதிதனில்வ்யதுமுப்பத் தாறினிற்பாழாமாதே. (ருகo)

மாதேனவலரியோன்பான் வக்கிரனுடனேகூடி
வேதமாய்க்கருமன்வீட்டில் விளங்கிடக்கருமன்றானும்
ஓதியபகைநீசங்க ளுதவியதானஞ்சேர்ந்தால்
சோதிடமாகத்தந்தை தோன்றியகருமமேற்கான். (ருகக)

வேறு.

சூரியனுங்கரியன்மனை யதனிலேகத்
தோன்றுகரியுயிர்க்கீரா றதனிற்போகப்
யாருயிர்க்கொன்பான்கோளன் மூன்றாறெட்டிற்
பகர்ந்திடவேவுடனொருகோள் சுபர்வந்துற்றால்
சூரியன்வந்திடுமதிபன் றிசையிலாரல்
தோன்றும்பகாரமதில் முடிவிற்றந்தை
கூறுமெமபுரமணுகுங் கணிதநூலாற்
குறித்தனர்களிதுமறையோன் கூறுமாதே. (ருகஉ)

மாதேகேள்வருந்தந்தை கிரகம்பூமி
வளருமற்பமாகவென வுதவாதென்றே
நீதியுடனுயிர்க்கதிபன் றிசையிற்காரி
நேரும்பகாரமதிற் பாதிமேலாய்
சீதமுடனோர்கிரகம் பிதாவுமல்லாற்
சேர்ந்திடுமேஅதுபெலமில் லாமலாகும்
வேதமெனவருங்கொடியோன் திசையிற்சுங்கன்
விளங்குமிவர்நாள்வருகிற் கிரகமொன்றே. (ருகரு)

வே று.

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமாட்சியுச்சம்
விதியுடன் தனிக்கவந்த மேன்மையாம்சேய் தன் தந்தை
பதிதனில்நாசம்பாம்பு பகர்திசைநாளிற்கேது. (ருகச)

வே று.

மாதேகேள்வருமுயிருக் கொன்பான்ரீசம்
வந்திடவேமால்குருதி யுடனொன்றாகச்
சீதமுடனுயிர்தனக்கீ ரஞ்சாங்கோளன்
சேரிரவிமாந்தியுடன் கூடியொன்றாய்
நீதியுடனுயிர்தனக்கெட் டலதுபன்னோன்
நேர்ந்திடுமித்தானம்வரப் பயந்ததந்தை
ஓதுமெனமொழிகபடன் கொடியசொல்லன்
ஒழிந்திடுநாட்கணிதமுறைப் படியேசெப்பே. (ருகரு)

செப்புமெனச்செஞ்சுடரோ னேகுமில்லஞ்
சேருமவர்க்கீரஞ்சாங் கோளன்நாளில்
தப்பியமீதார்திசைபுகரில் நாசந்தந்தை
தன்கருமந்தாரணியி லுதவுமென்றே
முற்படியேவருந்தந்தை கிரகம்பூமி
மொழிந்திடும்பாக்கியமெனவே நாசங்காட்டும்
துப்பிதழாயிதுதவறு தெனவென்றோதிச்
சோதிடசாஸ்திரப்படியே கணிதமோது. (ருகசு)

ஓதுமெனவொன்பான்கோ ளேகுநாதன்
உறையுமிடமாட்சியுச்சம் வளரமாந்தி
நீதியுடன்வருமலரி யிவர்களோடு
நேர்ந்திடுமொன்பான்றனக்கே உபயமானால்
வேதமுடன்தோன்றியசேய் வளருந்தந்தை
விளங்குமட்டமக்கோளன் றிசையிலம்மா
சீதமுடன்நாள்வருகில் மரணமென்று
செப்பினர்கள்சூரியன்றன் றுணைகூறே. (ருகஎ)

சூரியனுமாரல்மனை யதனிலேகத்
தோன்றுமதற்குடையோனுஞ் சோமனோடு

பாருயிர்க்காறட்டமமீ ராறிலேகிப்
பகர்ந்திடமுன்பின்புபாழ் வீடதாகச்
சாருயிர்க்கொன்பான்கோள னுதயமேறித்
தனித்திடவேதோன்றியசேய் தன்னையீன்றோன்
கூறுமெமபுரமடையக் கணிதநூலாற்
குறித்தனர்களிரவிக்கொன் பான்கோட்போக்கில். ()

மானுயிருக்கொன்பான்கோ ளுதயமேறி
வந்திடவேசுபர்வீடா யாகுமாகில்
சீலமுடன்பரியுடனே கருமனென்றாய்ச்
சேருமிடமிலக்கினத்துக் குபயமானால்
சூலமெனவரும்பருதி திசையிற்பத்தோன்
தோன்றுமபகாரம்வரி லீன்றவத்தன்
காலன்வருமுலகமதி லேகுமென்று
கருதியசோதிடவிதியாற் றிரட்டிச்சொல்லே. (௩௧௯)

வேறு.

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சேயோடொன்றாய்ச் சாரிடங்கரிவீடேக
விதியுடன்பருதியாரல் விளங்கிடப்பிதிர்த்தானத்தில்
மதியுடன்மறைசேர்வானால் வருந்தந்தைகருமமேறான். (௩௨௦)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கிரண்டிற் றனித்திடவவர்க்கீராறில்
மதிமகன்பருதிபாம்பு மாந்தியோடிவர்கள்சேர்ந்தால்
விதியுடன்றோன்றுமுன்னே விதித்தனர்தந்தைநாசம். (௩௨௧)

தந்தையர்நாசங்காட்டுஞ் சார்ந்திடுஞ்செல்வம்பூமி
விந்தையாய்க்கிரகமெல்லாம் விதித்தனருதவாதாகும்
முந்தியபிதாவூரல்லால் மொழிந்தனர்சிலநாள்வேறாய்ச்.
சிந்தையாய்ப்புகர்நாட்பாதி சேர்ந்திடுங்கிரகஞ்சொந்தம். ()

வேறு.

சூரியனென்பான்கோளன் புகர்மாலோடு
தோன்றுயிருக்குபயமதிற் றரிக்குமாகில்
பாருயிர்க்கொன்பான்மனையி லொருகோளேகப்
பகருமொன்பான்மனை தனையே மறைநோக்குற்றால்

சீருடனேவருந்தந்தை கிரகம்பூமி
சேர்தனமும்யோக்கியமாய் வளருமென்றே
சாருமெனத்தோன்றியசேய் தன்னையீன்ருேன்
சார்ந்திடுமேவயதிருப துபயமேலாம். (௩உ௩)

வேறு.

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுதயமேறித் தனித்திடச்சுபர்வீடாக்
விதியுடன்பரிமால்சுங்கன் விளங்கிடமறையுமானல்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தோன்றிடான்பிறந்தசேயாம். ()

வேறு.

சூரியன்வீடதிலுயிர்க்கொன் பான்கோளேகித்
தோன்றிடவேஅதற்குடையோன் தோன்றுமில்லங்
கூருமெனவுயிர்தனக்குப் பதினென்றேகிக்
குறுகிடவேமால்குருவு மதனிற்சேர்தாற்
சீருடன்றேன்றியசேயை யீன்றவத்தன்
தென்புலஞ்சேர்ந்திடும்விதியைக் கணிதஞ்செப்பக்
கூறினர்கள்வருமுயிர்க்குக் கருமந்தன்னிற்
குறுகிடவேபாம்புபுக ரஞ்சோன்நாளில். (௩உ௫)
நாளெனவேவருமரவு திசையிலொன்பான்
நல்குமிடமிருந்ததிப னளின்போக்கிற்
சூழுறவேவருந்தந்தை நாசங்காட்டுந்
தோன்றியதோர்வருங்கரும மேருன்சேயாம்
வாழ்வுடனேவொன்பான்கோ ளுடன்மால்வெய்யோன்
மறையுமொன்ருயிலக்கனத்தில் வரினுமானல்
தாழ்விலாமற்பிறந்த சேயின்றந்தை
சாய்ந்திடுவன்சேயுதித்த பொழுதின்மாதோ. (௩உ௬)
கரியுமுயிர்க்கோளாகிக் கருமனேடு
கருதுதயகேந்திரத்திற் றரிக்குமாகில்
வருமுயிர்க்கிராறதனிற் பருதியுச்சம்
வந்திடவேஅதற்குடையோ னதனிற்சேர்தால்
தரையதனிற்றேன்றியசேய் தன்னையீன்றேன்
சார்ந்திடுவன்வயதிருப தேகமேலாய்த்
கருதுமெனவருங்கரும மேருன்சேயுங்
கணிதமுறைதப்பாது சாற்றும்வண்ணம். (௩உ௭)

சந்திரன்மூன்றுங்கோளாய் மறைகேதோடு
சாருமிடங்கரிவீடாய்த் தரிக்குமாகிற்
சிந்தையுடனிக்கோட்க ளிருந்தநாதன்
சேருயிரிற்றனித்திடவே பவர்நோக்குற்றால்
வந்துயிர்க்குமூன்றுங்கோள் திசைநாள்மட்டும்
வளர்தந்தைசெல்வமதால் வாய்க்குமின்பம்
விந்தையுடன்மதிதனையே புகர்நோக்காரேல்
விளங்குதிசைமுடிவுவரை பீடையாமே. (ருஉஅ)

வேறு.

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சனியுடனுயிர்க்கெட்டானல்
விதியுடன்கரிநாள்வெய்யோன் விளங்கபகாரம்வந்தால்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தொகுத்தனர்கணிதநூலால். (ருஉகூ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்குருவீடேகப்
பதிபிதிர்க்குடையோன்நீசம் பகர்ந்திடமாலோனானல்
துதிபிதிர்மாலோன்நாளிற் றஞ்சிடுங்கரிநாட்பாதி. (ருரு0)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனிரவியொன்றாய்த் தரித்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடன்பருதிவீட்டில் விளங்கிடப்பவர்வந்துற்றால்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தோன்றிடான்பிறந்தசேயான். ()

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குப்பத்திற் றனித்திடச்சுபர்நோக்கில்லா
விதியுடன்பரிமாலொன்றாய் விளங்கிடமூன்றிலானல்
துதிபிதிர்பரிநாள்தந்தை துஞ்சிடுந்திசையினந்த்யம். (ருருஉ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குமூன்றிற் றனித்திடப்பிறந்தசேய்க்கு
விதியுடன்கணிதமாய்ந்தோர் விதித்தனர்தந்தைகர்மம்
பதிதனிலுதவானென்று பகர்ந்தனர்தரணிமாதோ. (ருருரு)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமதிக்கேழாகப்

பதிபிதிர்க்குடையோன்புந்தி பகருகேந்திரமேயானல்
துதிபிதிரீரேழொன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௩௩௪)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
விதியுடனுதயமேறி விளங்கிடக்காரியோடு
சதிருடன்பிதிர்க்குநாதன் சாரிடங்கரிவீடானல்
துதிபிதிரருக்கன்வந்தாற் றுஞ்சிடுந்திசைமுற்பாதி. (௩௩௫)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றனித்திடப்பவர்நோக்கில்லா
விதியுடன்பரிமால்சுங்கன் விரைவுடன்மதிவீடுற்ருல்
துதிபிதிர்கரிநாள்வந்தாற் றுஞ்சிடுந்தனதில்மாதோ. (௩௩௬)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பரிமாலொன்ருய்ச் சார்ந்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடனிக்கோள்தன்னை விளங்கியபவர்நேர்க்குற்ருல்
துதிபுகர்திசையிற்றந்தை துஞ்சிடுங்காரியூணில். (௩௩௭)

மந்தனுமொன்பான்கோளும் வருமுயிர்தனக்குநாலில்
வந்திடவதற்குநாதன் வரும்பரிபுகரோடொன்ருய்ச்
சிந்தையாயுயிர்க்கிரண்டிற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்கு
விந்தையாய்க்கரிநாள்தந்தை விதித்தனர்நாசங்காட்டும். (௩௩௮)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சுபர்வீடேகித் தனித்திடமறையாதானல்
விதியுடன்பருதிபுந்தி விளங்குகேந்திரமேயாகில்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனனீரஞ்சொன்றில். (௩௩௯)

சூரியன்மதிமால்சுங்கன் தோன்றுமிக்கோட்களொன்ருய்க்
காரிதன்வீட்டிற்சேரக் காரியுஞ்சேய்வீடுற்ருல்
சீருடன்பாம்புநாளிற் றிரமுடன்மாலோன்வந்தால்
ஆரியனணையாக வறைந்தனர்தந்தைநாசம். (௩௪௦)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்கெட்டிற் றனித்திடச்சுபமில்லர்தால்
விதியுடன்பிதிர்த்தானத்தில் வெய்யவன்றனிப்பானகில்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தோன்றிடும்முப்பத்தஞ்சில். (௩௪௧)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்குருதியில்லாய்

பதிபிதிர்க்குடையோன்ருனும் பகரிடமால்வீடானல்
விதியுடன்வயதோரஞ்சில் விதித்தனர் தந்தைநாசம். (ருசஉ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவெள்ளி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்புகர்வீடாக
பதிபிதிர்க்குடையோன்ருனும் பகரிடமதிவீடானல்
துதிபிதிரிருபத்தஞ்சிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (ருசங)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்புந்தி
சதிருடன்காரியோடு தரித்திடப்பவக்கோள்நோக்கப்
பதிபிதிர்க்குடையோனேடு பார்க்கவன்சசிவந்துற்ருல்
விதியுடன்வயதுபத்தில் விதித்தனர் தந்தைநாசம். (ருசச)

வேறு.

அரிபத்தாயுவ்வீட்டுக் கதிபனுந்தான்
அவர்வீட்டிலிருந்திடவுந் துணையில்லாமல்
விரிகுழலாய்வேதன்மதி யீராறெய்தவ்
வேதன்மதிக்கீராறிற் கொடியோன்சேர்ந்தால்
தருசெனனஞ்சுத்தமதா யிருந்தபேர்க்குத்
தனங்காலிபூமிகளுங் கொடுக்குமல்லால்
கருமுதலாய்வயதிருப தின்மேலஞ்சுள்
காலனிடத்தனுப்புவன்பி தாவையென்றே. (ருசரு)

மதிமாலுங்குருவுமொரு வீடாகமதியன்
வளரிடத்தோன்சுபராக மறையாதேயிருந்தால்
மதியனின்றமுன்பின்னும் புகரிருக்கிலவற்கு
வருந்தனமும்வாகனமும் பூமியுடன்றருமாம்
மதியனுடன்பளிங்கவனுஞ் சேரவுமவ்வில்லோன்
வரும்பாவராகிடவும் வருந்தயவுமுடையோன்
மதிபகையாமரணமட்டுந் தரித்திரமெய்யாது
மைக்குழலாய்முப்பதின்மேல் மூன்றில்பிதாயொழியும்.

வேறு.

சூரியன்மாலோடாறிற் ருேன்றிடச்சுபர்களோடே
வீரதிகருமக்கோளன் விளங்கிடமறைவாராகில்
ஆரியசெனனந்தொட்டு அலைச்சலாற்றுன்பமெய்தும்
பாரினில்வயதீராறுள் பலனிவையென்னலாமே. (ருசஎ)

ஆமதின்மேலாயின்ப மரும்பிதாவலேச்சல்காட்டும்
நேமமன்னியதேசத்தில் நேருவனென்றுசொல்வாய்
காமனைசெயித்தமானே களறிருபதின்மேலஞ்சில்
ஏமனுமுதயந்தானு மெடுப்பனும்பிதாவின்கர்மம். (ருசஅ)

வேறு.

தந்தை காரகன் சனியுட னேகவுஞ் சனியன்
வந்த யிற்பகை யாகிடப் பாம்புகித் திடுமால்
விந்தை புத்திரன் வயதுமீ ராறினுட் பிதாவை
அந்த ரத்தினி லெடுத்திடு மென்றிடு மழகாய். (ருசகூ)

வேறு.

அட்டமத்தில்மாந்திசுடர் மாலெய்தாலும்
அட்டமத்தோனிக்கோட்கள் வீடெய்தாலும்
விட்டமதியட்டமத்தோ னிருந்தயில்லம்
விளங்குசுத்தம்வரமுன்பின் றேன் றுமானல்
திட்டமுயிர்தனக்குநா லேழொன்பானுற்
சேர்ந்திடநாற்பத்தஞ்சிற் றந்தைபோக்காம்
கட்டம்பின்னேகமதுள் மாதுர்போமால்
காரகன்முன் னூலறிந்து கணித்தார்மேலோர். (ருருO)

வேறு.

சூரியனுட்சியுச்சந் தோன்றிடக்குருவெய் தாலும்
பாருயிர்க்கொருநாலாகிற் பகலவனிருந்தவில்லோன்
நேருபஞ்சமமேழொன்பான் னின்றிடமறையோன்சேர்ந்தால்
கூருநாற்பதின்மேலெட்டிற் கொன்றிடும்பிதாவையென்பார். ()

என்புசூரியனும்வேறு யிருந்திடநீசமானல்
வன்பதமிருபதின்மேல் மாய்ந்திடும்பிதாவையென்பார்
தன்பகையாகுமானுற் றந்திடுமுப்பத்தொன்றில்
இன்பமோர்சதுரந்தன்னி லிமனிடத்தனுப்புந்தந்தை. (ருருஉ)

மால்புகருடனேமிக்க வருந்துசூரியனுற்றாலும்
மாலவன்முன்பின்னுக வருங்கரியாரல்சேர்ந்தால்
மாலவனுயிர்க்குப்பன்னேன் றுனமேபாம்புற்றாலும்
மாலதாய்ப்பிதாவுமிக்கோய் வருந்துகாயாசந்தோய்வன். (ருருரு)

சூரியனுநீருகிற் ரேய்ந்திடப்புகர்மாலேகச்
சூரியனிருந்தவில்லோன் ஞெருகுத்துயிர்மறையுமாக
நாரியேவுயிர்க்குநாலில் நாகமாம்பாம்பிருக்கில்
கூரியவிருபத்தொன்பாம் வயதினிற்பிதாவும்போமாம். (ருருச)

* பிதிர்புகர்வியத்தில்மேவப் ‡ பிதிரவன்பாவர்சேரக்
கதிரவனின்றராசிக் கதிபதிதிசையூண் தன்னில்
விதியுடன்பிதிர்க்குக்கர்மம் மேவுமுப்பத்திரண்டிற்
சதிருடன்முப்பத்தாறிற் சந்ததிபுதல்வருண்டாம். (ருருரு)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சுபர்களோடு சாரிடம்பவர்வீடுற்றால்
விதியுடன்கரிமால்தானும் விளங்கிடமறைவதானல்
துதிபிதிர்பதினுறக்குட் டுணிவுடன்கருமமாதோ. (ருருசு)

வேறு.

பிதிருடைத்தானங் காரியாய்ப்பத்தோன் பேரில்லமாகவே அக்கோள், சதிருடனுயிர்க்கு நாலினிற்ரேன்றச் சற்குருகேதுடன்தரித்தால், விதியுடனிரவி யுயிரினில்வருக விளங்கியபுகர் மதிமாலுங், துதிபெறவாவிக் கிரண்டினிற்ரேன்றச் சொல்லினுர் பிதாவுடன்கருமம். (ருருஎ)

சொல்வதுகருமங் குருதிசையதனிற் ரேன்றிடும்புகருடன் பெலமாய், நல்மொழிவசத்தன் நயகுணசீலன் நாடினுர்பெரியவர் மொழியால், வெல்வதுபத்தி லரவுமேதனித்தால் வேந்தரால் முயற்சிகள் பெலமாய்ச், சொல்வதுவயது நாற்பத்தெட்டதன் மேற் ரேன்றிடுமுயற்சிகளதிகம். (ருருஅ)

அதிகமாயிருப்ப னிரண்டின்கோட்டிசையி லந்தணன்பொசிப்பினிலாகுங், கெதிபெறக்கீர்த்தி வாகனங்கிரகங் கெணித்தனர் வெகுபிரபலமாய்த், துதிபெருமரசர் தனமுடன்வாழ்வன் சொல்லினுர் யாவரும்வணங்கும், விதியுடன்வாய்க்கும் பூமியுஞ் சேரும் விளங்கியசாதகன் றனக்கே. (ருருகூ)

வேறு.

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனிரவிசுங்கன் தன்னுடன்மறைவதானல்

* பிதா - ஒன்பதுக்குடையவன். † பிதிரவன் - சூரியன்.

விதியுடன்கரிமால்வீடாய் விளங்கிடச்சேய்நோக்குற்ருல்
பதிதனிற்பிதாவின்கர்மம் பாலகனுதவான்மாதோ. (ருசுo)

ஒன்பதுக்குடையோன்றன்னேடுற்றிடுங்கிரகந்தன்னை
வன்பினுற்செவ்வாய்காரி வாக்குடன்நோக்கச்சோமன்
அன்பினுற்பத்திற்சேரி லறைந்தனர்புதனிற்காரி
இன்பமாய்வந்தபோதி லெய்திடும்பிதாவின்கர்மம். (ருசுக)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சுபர்வீடாகப்
பிதிர்தனக்குடையோன்புந்தி பீதகனதனிற்சேர்ந்தால்
விதியுடன்முப்பத்தொன்றில் விதித்தனர்தந்தைநாசம். (ருசுஉ)

பிதிருடைத்தானஞ்செவ்வாய் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சோமன்மாந்தி தன்னுடனுயிர்க்கிரண்டில்
விதியுடனிரவிமாலும் விளங்கிடமறையப்பொன்னன்
சதிருடன்நோக்கத்தந்தை சாய்ந்திடுபெலமென்ருரே. (ருசுங)

பிலமெனுஞ்சுங்கன்கூடிப் பிரீதியாயுயிர்க்கிராறில்
பலமுறவயதுநாலு பத்துடனிரண்டிற்போகுஞ்
சலமுடன்பெலமில்லாமற் சஞ்சலமாகப்பின்னே
குலமுடன்வந்துசேரக் குறித்தனர்தமிழையாய்ந்தோர். (ருசுச)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குமூன்றிற் றனித்திடப்புகரேநோக்க
விதியுடனிரவிமந்தன் விளங்கியராகும்பத்தில்
துதிபிதிருமூன்றஞ்சிற் றுஞ்சிடுமரவுபொன்னில். (ருசுரு)

வேறு.

ஒன்பதுக் குடையோன் கேந்திரமதனி லுதித்திடச்சோமனுங்கூட, இன்பமாய்க்கருமன் கேதுடன்லாப மிருந்திடக்குருவுமேபார்க்க, அன்பிலாப்பாம்புங் குருவுடனஞ்சி லமர்ந்திடப்பிறந்த சாதகற்குத், துன்பமாயரவு திசையினில்மாலோன் தோன்றிடப்பிதாவுடன் கருமம். (ருசுசு)

வேறு.

லக்கினத்தில்மந்திரியும் புகருமாக
நட்பாட்சியுச்சமதிற் சனியுமாகப்
பக்கமுடன்சேய்கிரகம் பாழாய்த்தோன்றப்
பதினென்றுக்குடையோனும் பகையேசேரச்

சக்கரைபோற்பிள்ளையுந்தான் பிறக்குஞ்சொன்னேன்
தன்வயதோரெட்டினுக்குட் டந்தைபோகும்
அக்கிரகம்விட்டுத்தான் வெளியேசேர
அயலூரிற்பிரவேச முரைத்தார்மேலோர். (௫௬எ)

வேறு.

மதியுமேதன்வீடாக மாந்தியுமதனிற்சேர
விதியுடன்மங்கைதானம் வீடுமேசுத்தமாக
அதிபதிக்குடையோன்வீட்டி லமர்ந்திடப்பாவர்சேர்ந்தால்
துதிபிதிர்கீர்த்திசெல்வம் சுத்தமென்றுரைத்தார்மேலோர். ()

வேறு.

சூரியன்மாலோன் மறைந்திடச்சுங்கன் தோன்றிடக்காரி கேதுடனே, பாரினிலுயிரிற் பதிந்திடச்செவ்வாய் பாக்கியத்தானத்தைப்பார்க்கில், வீரியமில்லாக் கதிரையும்நோக்கில் விதித்தனர் புகர்பரிமாலூண், சாருமேபிதாவின் கருமமேமுடிக்கச் சாற்றினர் பெரியவரருளால். (௫௬௯)

ஏழினுக்குடையோன் முன்பினிற்பாவ ரிருந்திடக்கேந்திரமதனில், ஆழ்வெயிற்றூனம் பாவராயிருக்க வதிபதியுச்சமாயிருந்தால், ஊழ்விதிப்படியாய்க் கணிதநூலுரைத்தா ரொன்றிரண்டானதோர்வயதிற், பஃழ்படவொழிக்குந் தந்தையர்கருமம் பகரலாமவனுடயாக்கை. (௫எ0)

சந்திரனேழிற்சற்குருகேது சார்ந்திடனிலமகன்கூடத், தந்திரத்துடனே ஆட்சியாயுச்சஞ் சதிருடன்பகையதா யிருக்கில், அந்தரவிழியா னவனுடயோக மையஞ்சுவயதிலேசாற்ற, மந்திரமுடனே கெணிதநூல்விதித்தார் வாலிபப்பிதிர்கர்ம முடையோன். (௫எக)

வேறு.

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுங்காரி சற்குருவீடானாலும்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவராயிருமூன்றுள்ளாய்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்திடாரென்றுகூறே. (௫எ௨)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்காறிற் றரித்திடவுயிரோனேடு

விதியுடன்பரிமால்பாம்பு விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிரா வுநாளிற் றுஞ்சிடுங்காரிவந்தால். (ருஎங)

மந்தனும்பாம்போடொன்ருய் வந்திடப்பிதிர்த்தானத்தில்
விந்தையாயக்கோள்நீசம் விளங்கிடச்சுபரோடாக
வந்துயிர்தனக்குப்பன்னென் றதனிலேமால்பான்வந்தாற்
றந்தையாரவுநாளிற் சாய்ந்திடுமறைவந்துற்ருல். (ருஎச)

வே று.

சிங்கலக்கனத்திற் றினகரன்மாலுஞ் சேர்ந்திடவொன்று நான்கேழிற், பங்கமில்லாமற் சனியுமேயிருக்கப் பாக்கியத்ததிப னுங்கேதுஞ், சங்கையாயுச்ச மாட்சியாயிருந்தாற் சாலவேபதி னெட்டுவயதில், மங்கையரெடுக்குந் தந்தையர்கருமம் வகுத்த னர் முப்பதுமிரண்டில். (ருஎரு)

மறையவனுச்சம் விளங்கிடவஞ்சில் மதிமகனிரவியும் புக ரும், நிறையுடன்நட்புப் பகையதாயிருக்கில் நிகழ்ந்திடுந் தந்தை யர்கருமந், துறையுடனவற்கு முப்பத்தேழொன்றிற் ருெலேயுமே தந்தையரென்று, தறையினிற்கெணித சாத்திரம்பார்த்துச் சாற் றிஞரவருடபலனே. (ருஎசு)

வே று.

பகலவன்கரிவீடேகப் பார்க்கவன்கொடிவீடாகத்
தகரிலாப்பாம்புசேயுஞ் சாரவேப கையினில்லம்
பகருடனேந்திரண்டு பத்தினிற்றந்தைசாவாம்
நகரதிலவற்குத்தாரம் நாசமாமொழியுமென்றே. (ருஎஎ)

வே று.

துலேயதிற்சேயு மாந்தியுமாகச் சூரியனவருடன்கூடப், பெ லத்துடனவருக் கொன்றுநான்கேழிற் பெலமுடன்மதிமக னிரு க்கக், கலக்கமில்லாத யோகனேயாவன் காரியனமைச்சர்க்கு நிகராய்த், தலத்துடனிருந்து வாழ்குவனென்றே சாதகன்நிலே யுரைத்தனரே. (ருஎஅ)

உரைத்தவர்பெரியோ ருயிர்க்குளோன்வீட்டி லுலோகிதச் சேயிருந்தாலும், வரைத்தது ஆறு பத்துமேமூன்று வாலிபப் பிதிர்கர்ம முடையோன், கரைத்துமேயொளிப்பா னிருபதுநா லிற் காதலியவனுடன் சேர்வாள், விரைத்தது அவன்றன் மொழி தவருது வேந்தற்குவொப்பலாம் விரலோன். (ருஎகூ)

லக்கினந்தன்னிற் குளிகனுமிருக்க நாலிலேயேழினுக்குடையோன், மக்கனமாக முன்பினிற்பாவர் வந்தவர்பகையதாயிருக்க, இக்கணமவர்க்கு வரும்பலனெல்லாம் யீனமாயொழிந்திடுமதன்பின், பக்குவவயது இருபதுநாலிற் பான்மையாந் தந்தையையெடுக்கும். (ரு௲௦)

மகரலக்கனத்தில் மந்திரிகேது வளமுடன்சமாயிருக்கத், பகருதற்கரிய குளிகனுமூன்றிற் பங்குவும் நட்பதாய்த்தோன்றப், புகருடன்புந்தி மிதுனத்திற்சேரப் பூமனுஞ்சூரியன் பாம்பும், தகவிலாதிருக்கிற் றந்தையர்கருமஞ் சாற்றினார்நாலிரண்டதனில். (ரு௲க)

வேறு.

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகத்தானுஞ்
சதிதனித்திடினுங்காரி சந்திரனோடுசுங்கன்
பதிபிதிர்க்குடையோனோடு பருதிவீடதனிற்சேரச்
சதிருடன்றந்தைகர்மஞ் சாற்றினாரெட்டேழில். (ரு௲உ)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகத்தானஞ்
சதிருடனதனில்வெய்யோன் சசிமகனோடுசேரப்
பதிபிதிர்க்குடையோனில்லம் பாம்புடனலவன்சாரில்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்திடுமுப்பத்தஞ்சில். (ரு௲ரு)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனருணனோடு தரித்திடக்கரிவீடாக
விதியுடன்பருதிவீட்டில் விரைவுடன்மதிவந்துற்றால்
துதிபிதிரிருபத்தெட்டிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (ரு௲ச)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்பாம்பு
சதிருடனதனிற்றோன்றச் சனியுமவ்விடத்திற்றுவப்
பதிபிதிர்க்குடையோன்றானும் பார்க்கவனருணனோடு
மதிமகனில்லஞ்சேர்ந்தால் மாயுமென்றுரைத்தார்தந்தை. ()

தந்தையர்நாற்பத்தொன்றிற் சதிருடன்நாசங்காட்டும்
விந்தையாய்க்கருமந்தானும் விதியுடனுதவான்மாதோ
சிந்தையில்விசாரமாகுந் தேறிடுமெதியாலென்றார்
தந்தையர்செல்வம்நாசந் தரணியிற்பிறக்குஞ்சேய்க்கு. (ரு௲௬)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பொன்னன்வீட்டிற் றனித்திடவதனிற்பொன்னன்
விதியுடன்நோக்கவந்த விளங்கியசேய்க்குக்கர்மஞ்
சதிருடன்முப்பத்தொன்றிற் றந்தையர்நாசமாதோ. (௩௮௭)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுஞ்சுங்கன் சற்குருமறையாதாகிற்
பதிபிதிர்க்குடையோன்ருனும் பார்க்கவனில்லஞ்சேர்ந்தால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொடுத்திடுமிருபத்தொன்றில். ()

பிதிருடைத்தானஞ்சுங்கன் சேரில்லமாகப்பாம்பு
சதிருடன்தனிக்கவக்கோள் சாரிடஞ்சுபர்வீடாகப்
அதிபிதிர்க்குடையோன்புந்தி யந்தணனதனிற்புக்க
விதியுடன்முப்பத்தொன்றில் விதித்தனர்தந்தைநாசம். (௩௮௯)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிமால்வெய்யோன் சாரிடஞ்சனிவீடாகில்
பதியிற்சேய்வயதெட்டாகப் பாழ்படுந்தந்தையாக்கை
விதியினுல்நாசமென்று விளம்பினர்கணிதமாய்ந்தோர். (௩௯0)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
பதிபிதிர்க்குடையோனேடு பகரிடஞ்சேய்வீடானல்
சதிருடனுதிக்குஞ்சேய்க்குச் சாற்றினர்பிறந்தவன்றே
விதியுடன்பிதாவைக்கொல்வன் விளங்கிடுந்தரணிமாதோ. ()

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமால்வீடேக
மதிமகன்புகர்பொன்வெய்யோன் வருமிக்கோளுதயந்தன்னில்
விதியுடன்பவர்வீடேகி விளங்கிடக்கருமங்கூறே. (௩௯௨)

கூறிடுமரவுவந்தாற் குறித்தனர்கருமமொன்று
சீருடன்வருவதென்று செப்பினர்கணிதமாய்ந்தோர்
மாறியேயன்னேன்நாளில் வரும்புகாபகாரத்திற்
தாரணிமீதுகன்மந் தானென்றுநடக்கும்பாரே. (௩௯௩)

வே று.

அட்டமாதிபனு முயிர்க்குளோன்ருனும் அருக்கனுமஞ்சினேன்ருனும், கட்டமாங்கரிய னுட்சிநட்பாகக் கலந்துடனிருப்பனேயானுற், சட்டமாயவன்ற னுக்கையுந்தொலையச் சாற்றினூர

றுபதோரண்டிற், றிட்டமாய்நடக்கு மிதுதவறுது திறமுடன் தந்தையர் கருமம். (௫௬௪)

வேறு.

சூரியன்மாலோடேகித் தோன்றிடவுயிர்க்கிராறில்
ஒருயிர்தனக்குப்பத்தி லுடுபதியுடன்பாம்புற்றால்
பாரிற்சேய்வயதோராண்டிற் பாழ்படுந்தந்தைகர்மம்
ஆரியனாணையாக அறைந்தனர் தரணிமீதே. (௫௬௫)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்புந்தி
மதியுடனஞ்சொன்பானும் வக்கிரனரவமாந்தி
சதிருடன்மால்வீடானாற் சாற்றலாமுப்பத்தொன்றிற்
பிதிருடக்ருமஞ்செய்யப் பிறந்திடுந்தரணிமீதே. (௫௬௬)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்ருணன்பாம்பு சார்ந்துடனென்றதாகப்
பதிபிதிர்க்குடையோனோடு பாண்டியனிருப்பதானால்
துதிபிதிரொழியுங்கன்மந் தொடுத்திடுமுப்பத்தொன்றில். ()

வேறு.

சூரியன்வீடதிற்புகர்கே துடனொன்றாகித்
தோன்றிடவேஅதற்குடையோன் றேன்றமில்லம்
சாருமுயிர்க்குபயமதிற் சுபர்களோடு
தரித்திடவேயிவர்களைச் சுபர்கள்நோக்கா
பாருயிர்க்கொன்பான்மனையி லரவுசேரப்
பருமக்கோள்கேந்திரமாய்த் தனிக்குமானாற்
சீருடனேபுகர்திசைநா ளதனிற்றந்தை
செத்திடுமேகேதுடனாள் முடிவில்மாதே. (௫௬௮)

சூரியன்மால்கேதுடனே கருமனில்லந்
தோன்றிடவேகருமனொன்பா னக்கோள்மாந்தி
சாருயிர்க்கொன்பானலது பன்னொன்றான
தானத்திற்றனிருக்க மறையோன்நோக்கச்
சீருடனேதோன்றிடுஞ்சேய் தனக்குத்தந்தை
திரவியமும்பூமிகன்று காலிசேரும்
பாருலகிலுயிர்தனக்கொன் பான்கோள்நாளிற்
பகருந்திசைமுடிவதனில் நாசங்காட்டும். (௫௬௯)

வே று.

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவெய்யோன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பருதிவீடால்
விதிமுறைப்படியேதந்தை வீந்திடுஞ்சேய்நாள்வந்தால்
பதியுமன்னியதேசத்திற் பகர்பிதுர்கருமமென்றே. (சூ00)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவாரல்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வீடாக
விதியுடன்பருதிநீசம் விளங்கிடத்தனிப்பானுகில்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனரருக்கன்வந்தால். (சூ0க)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனருணனோடு தரித்திடக்சுரிவீடேக
விதியுடன்பருதிவீட்டில் விரைவுடன்மதிவந்துற்றால்
துதிபிதிரிருபத்தெட்டிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (சூ0உ)

மால்பரிபுகர்சேய்பொன்னன் வந்திடப்பிதுர்தானத்திற்
சாலவக்கோளனெட்டிற் றனித்திடப்பவர்வீடானல்
ஞாலமீதுதிக்குஞ்சேய்க்கு நற்குருவருநாட்பாதி
ஏலவீன்றோனைக்கொல்லு மென்றனர்கணிதநூலோர். (சூ0ரு)

சேய்புகாருக்கன்புந்தி சேர்ந்திடப்பிதிர்த்தானத்தில்
தூய்பிறைமறையோனோடு தோன்றிடவலரியில்ல
மாயுயிர்பிறக்குஞ்சேய்க்கு வயதொருபத்திலத்தன்
போய்விடுங்கருமஞ்செய்யப் புகன்றனர்கணிதமாய்ந்தோர். ()

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடனருக்கன்வீட்டிற் றன்தனித்திடினுமானல்
விதியுடன்புகர்மால்கேது வெய்யவன்மறையாதாகில்
துதிபிதிர்மதிமாலாரற் றுகையெனவொழியுந்தந்தை. (சூ0ரு)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கிரண்டிற் றனித்திடச்சுபர்வீடாகப்
பதிபிதிர்க்குடையோன்மூனும் பங்குதன்வீடேயாகில்
விதிபிதாகருமஞ்செய்ய விளம்பினர்முப்பத்தொன்றில். (சூ0சூ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகநாலோன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறையாதாகில்

பிதிர்பதிக்குடையோன்ருனும் பிறங்கிடமறைவதாளுற்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்திடும்புகர்நாட்கேதில். (சு0எ)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருட..னுயிர்க்கீராறிற் றனித்திடப்பாவர்பார்க்க
விதிபிதிர்க்குடையநாதன் மேவநற்சேய்வீடுற்ருற்
பதிபிதுாகருமஞ்சேய்க்குப் பகரொருவயதிலம்மா. (சு0அ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சுதிருடனுயிர்க்கீராறிற் றனித்திடப்பாவர்பார்க்கப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள்தரியாராகில்
விதிபிதிர்க்கருமஞ்சேய்க்கு விளங்கிரண்டாண்டிலம்மா. (சு0கூ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கீராறிற் றனித்திடச்சுபர்நோக்குற்ருல்
பதியிற்சேய்வயதோரைந்திற் பயின்றவன்கருமஞ்செய்ய
விதிவருங்கணிதமாய்ந்து விளம்பினர்தரணிமீதே. (சுக0)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிகேதோடு சாரிடங்காரிவீடால்
விதியுடன்பருதியாறில் விளங்கிடப்பாவர்பார்த்தாற்
றுதிபிதிரொழியுங்கர்மஞ் சுதன்வயதொருநான்கென்னே. ()

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனிறைவனேடு சாரிடங்குருதிவீடாய்
விதியுடன்பிதிர்க்குநாதன் விரைவுடன்றன்வீடுற்ருல்
துதிபிதிர்கருமம்பாரிற் ருேன்றுஞ்சேய்வயதுமூன்றில். (சுகஉ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கீராறிற் றனித்திடப்பாவாபார்க்கப்
புதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள்தனிக்குமாகில்
விதிசுதன்வயதுமொன்றில் விளம்பினர்தந்தைநாசம். (சுகங)

பிதிருடைத்தானம்வெள்ளி பேரில்லமாகவக்கோள்
விதியுடனின்றவனேடு விளங்குமம்புலிவீடாகப்
பதிபிதிர்க்குடையோன்ருனும் பகரிடந்தன்வீடுற்ருல்
துதிபிதிர்கருமஞ்செய்யத் துணிவுடனுதவான்மாதோ. (சுகச)

மதிமகன்பருதியொன்பான் வரினுமிக்கோட்களொன்ருய்ச்
சதிருடனுயிர்க்குநாலிற் றரித்திடச்சேய்வீடாக

விதியுடனதற்குநாதன் விரைவுடன்பரிவீடுற்றால்
துதிபிதிரரவுநாளிற் றஞ்சிடுந்திசையிற்பாதி. (௪௧௫)

வேறு.

சூரியனும்பண்டிதனு மோர்வீடேகித்
தோன்றிடக்கேந்திரமாகிச் சுபரில்லாகச்
சீருடனேவுயிர்தனக்கொன் பானின்கோளன்
சேரிடமால்வீடதுவாய்ச் சுபரில்லாமல்
வீரியமாய்ச்சூரியன்றன் மனையிற்பாம்பு
விளங்கிடவேசுபர்களதி லிருப்பாராகில்
ஆரியனுனைப்படியே மதிநாள்தந்தை
அழிந்திடுமத்திசைபாதி யதனிற்றானே. (௪௧௬)

சூரியனும்பொன்னுடனே பவர்வீடாகித்
தோன்றுமிடமறையாமற் சுபர்நோக்கில்லாக்
காரியுடன்பாவரதி லொன்பான்கோளுங்
கதிரவன்வீடதுவாகி மறையாதாகிற்
சீருடன்றோன்றிடுஞ்சேய்க்கு வயதுநாலிற்
செத்திடுமத்தன்றனக்குக் கருமஞ்செய்வன்
பாரதனிற்கணிதனா லாய்ந்தமேலோர்
பகர்ந்தனர்சாதகற்குவரும் பலனைப்பாரே. (௪௧௭)

வேறு.

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மதிக்குப்பத்திற் சார்ந்திடச்சுபர்வீடாகக்
கதிரவன்புந்தியொன்றாய்க் கலந்திடமறைவீடானல்
விதியுடன்மறைநாள்தந்தை வீய்ந்திடுங்கரிவந்துற்றால். (௪௧௮)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
கதிருடன்புந்திகேது கனகனுமுடனென்றாகித்
துதிபவர்மனையிலேகித் தோன்றிடமறையாதானல்
பதியினில்நாசந்தந்தை பகர்ந்தனர்கரிமுற்பாதி. (௪௧௯)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகச்சுங்கன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறைவதாக
விதியுடன்பருதிபுந்தி விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிர்புகர்நாள்தந்தை துஞ்சிடுங்கரிவந்துற்றால். (௪௨௦)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறையாதாகில்
மதிமகன்காமன்பானு மாந்தியும்புகர்வீடானால்
பதியினிற்குருநாள்தந்தை பாழ்படுங்காரிவந்தால். (௬௨௧)

வேறு.

சூரியன்மால்மாந்தியுடன் புகரொன்றாகித்
தோன்றுமிக்கோள் பவர்வீடாயுயிர்க்குநாலோன்
சேருடனேயொன்பானைத் தரிக்கவக்கோள்
சேருமிடம்மறையாமல் மதிக்குநாலாய்ப்
பாரினிமேல்சுபர்வீடாய்த் தனிக்கவந்த
பாலனுக்குச்சோதிடநூ லாய்ந்தமேலோர்
ஆரியனுணைப்படியே வளருந்தந்தை
அழிந்திடுமேகரிதிசையிற் குருநவுண்தன்னில். (௬௨௨)

வேறு.

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனீசவீடாய்ச் சார்ந்திடப்புகரொன்றாகக்
கதிருடனுதிரனொன்றாய்க் கலந்திடச்சேய்வீடானால்
பதிதனிற்பிதாவின்கர்மம் பாலகனுதவான்மாதோ. (௬௨௩)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சேய்வீடாக
விதியுடன்புகர்பானொன்றாய் விளங்கிடமறைக்காறற்றால்
துதிபிதிர்கன்மம்பொன்னன் தோன்றபகாரப்போக்கில். (௬௨௪)

சூரியனருணனோடு தோன்றிடமுயிர்க்கெட்டாகச்
சாருயிர்தனக்கொன்பானிற் றரித்திடப்புகர்கேதானால்
சீருடனுதிக்குஞ்சேய்க்குத் திறவபதீரேழொன்றில்
ஆரியனுணையாக அறைந்தனர்தந்தைநாசம். (௬௨௫)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகமந்தன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறையாதாகில்
விதியுடனருக்கன்றானும் விரைவுடன்சுபர்வீடுற்றால்
பதியினிற்பருதிவந்தாற் பாழ்படுந்தந்தைமாதோ. ( ௨௬)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகச்சுங்கன்
விதியுடனுயிர்க்கொன்பானில் விரைவுடன்றனிக்குமாகில்

சதிருடனருக்கனேழிற் றரித்திடப்பிறந்தசேய்க்குத்
துதிபிதிரிருபத்தாறிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (சஉஎ)

சந்திரன்பருதிசுங்கன் தரித்திடப்பிதிர்த்தானத்தில்
வந்துயிர்தனக்கொன்பானும் வளருகேந்திரமேயானல்
சுந்தரத்துடனேதோன்றுந் துணிவுடன்சாதகற்கு
வந்திடும்வயதோரேழில் வகுத்தனர்தந்தைநாசம். (சஉஅ)

மாலவன்குருதிபொன்னன் வந்திடப்பிதிர்த்தானத்திற்
சாலவேபருதியேழிற் றனித்திடப்பிறந்தசேய்க்கு
ஏலவேகாரிநாளி லிசைவுடன்பிதாவைக்கொல்லத்
தூலமாயுதிப்பானென்று சொல்லினர்சாதகற்கே. (சஉகூ)

பிதிருடைத்தானம்வெள்ளி பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றனித்திடப்பாவர்நோக்க
விதியுடன்பருதியுச்சம் விளங்கிடப்பிறந்தசேய்க்குத்
துதிபிதிரைம்பத்தொன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (சநo)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்காறிற் றரித்திடவுயிரினேடு
விதிபுதனலரிபாம்பு விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடுங்காரிவந்தால். (சநக)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றரித்திடக்காரிவந்தால்
விதியுடன்பருதிபத்தோன் மேவிடம்மறையாதானல்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடும்வெள்ளிவந்தால் (சநஉ)

சூரியனிறைவனேடு தோன்றிடப்புகரில்லாகக்
சாருமக்கோளன்றுனுந் தனித்திடப்பருதிவீடாய்ப்
பாரினிலுதிக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனர்மதிநாட்பாம்பில்
ஆரியனுணையாக அறைந்தனர்தந்தைநாசம். (சநந)

பரிதிபாதங்கிபொன்சேய் பார்க்கவனிக்கோளொன்றாய்த்
துரிதமாயுயிருக்காறிற் றேன்றிடப்பொன்சேய்வீடாய்ப்
பிரியமாயருணன்பாம்பு பிலமுடன்மறைவதானல்
கரிபரிதுகையிற்றந்தை காலனூரடைவனம்மா. (சநச)

சூரியன்காரிபூமன் சுக்கிரன்குருவோடொன்றாய்ச்
சாரிலக்கனத்துக்காறிற் றரித்திடச்சேய்பொன்வீடாய்ச்

சீரிடமொன்பான்பாம்பு சேரிடங்கரிவீடானல்
சூரியன்குருமாலாண்டு துகைபதிலொழியுந்தந்தை. (சஙரு)

மாலவனிரவிகேது வருமிடம்பிதிர்த்தானத்திற்
சாலவேபருதிவீட்டிற் றரித்திடப்புகர்பான்வந்தால்
தூலமாய்த்தோன்றுஞ்சேய்க்குத் துணிவுடனீரேழொன்றில்
பாலனுண்டீரெட்டொன்றிற் பாழ்படுந்தந்தைமாதோ. (சஙசு)

பிதிருடைத்தானம்வெள்ளி பேரில்லமாகப்பாம்பு
சுதிதனித்திடினுமக்கோள் சாரிடமதிபொன்வீடால்
விதியுடன்பிதிர்க்குநாதன் விரைவுடன்மறையாதாகில்
துதிபிதிர்மால்சேயாண்டு துகையெனவொழியுந்தந்தை. (சஙஎ)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கீராறிற் றனித்திடப்பாவர்நோக்கக்
கதிரவன்புந்திபாம்பு கலந்துகேந்திரமேயானல்
துதிபிதிர்நாலோன்நாளிற் றுஞ்சிடுங்கரியன்போக்கில். (சஙஅ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பருதிவீடாய்
விதியுடனக்கோள்தானும் விரைவுடன்குருவீடுற்றால்
பதியதிற்சேயாண்டொன்றிற் பகர்ந்தனர்தந்தைநாசம். (சஙகூ)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சுபர்கள்வீட்டிற் றனித்திடமறையாதாக
மதிமகன்பருதியோடு வருநவமதனிற்சேர்ந்தால்
துதிபிதிர்கருமநாளிற் றுஞ்சிடுமரணமாதோ. (சச0)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனிரவிகேதுஞ் சார்ந்திடவுயிரில்நீசம்
விதியுடன்பத்திற்செவ்வாய் விளங்கிடக்குருவுநீசம்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனரிருபத்தஞ்சில். (சசக)

வேறு.

சூரியனுயிரிற்றேன்றிடவொன்பான் சுபருடன்பாவர்வீடே யிக், காரியுங்குளிகன்சேரிடம்பத்தாய்க் கருமனும்மதிமகன்வீட்டிற், சீரியருலகிற்செனித்தசேய் தனக்குத்திடமுடன்பிதிர்வழியதனில், ஆரியனணையமைந்திடுங்கருமம் அஞ்சுபேர்க்குதவுவன் மாதோ. (சசஉ)

ஒன்பதுக்குடையோன் கேந்திரமதனிலுடுபதியுயிருக்கொ ன்பதனிற், பொன்புகரொன்ருய்ப் பொருந்திடவஞ்சிற் போந்த வெல்லாறிலேமறையப், பின்புமார்த்தாண்டன் வீட்டினிற்காரி பிறங்கிடப்பிறந்தசாதகற்கு, அன்பனுங்காரி திசைதனதனில் அடர்ந்திடுந்தந்தைதன் கருமம். (௪௬௩)

ஒன்பதுக்குடையோ னிரவிமால்ஞானி யுடுபதிதனக்குமீ ராறிற், பின்புபொன்னைந்திற் பிலத்திடப்பாம்பும் பிங்கலன்றனக் குமேழதனில், இன்பமாய்க்கருமன் மதியுடன்நாலி லிருந்திடப் பிறந்தசாதகற்கு, அன்பனுங்கருமன் திசையரவதனி லடர்ந்தி டும்பிதிருட கருமம். (௪௬௪)

வேறு.

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கிரண்டிற் றரித்திடப்பருதிமாலும்
பதிகரிவீடதாகிப் பதிந்திடப்புகரும்பத்தில்
துதிபிதிர்மாலோன்நாளிற் றுஞ்சிடுங்கரியன்போக்கில். (௪௬௫)

வேறு.

நாலினேன்மதியு மிரவியுமாலும் நண்ணிடக்கேதுமொன்ப தனிற், கோலினேனிருந்த வீட்டின்கோள்குருவாய்க் குறுகிடவ ஞ்சிற்சேய்பாக்கில், வாலிபமானவயதுபத்தினுக்குள் வந்திடுமி ரண்டுநற்கருமம், சீலமாமிரவி மதிதிசைசேய்நாள் செப்பினர்வா ணிபம்பூமி. (௪௬௬)

பூமியுந்தனமும் பொருந்துவன்முயற்சி போகமுமற்பமாங் காமி, தாமிதகுணத்தன் தயிரியன்வஞ்சன் தையலர்கலவிக்குப் பிரியன், நேமமாம்பத்தி யறிவுளான்கோபி நெஞ்சினிற்சபலமே யுடையன், காமனைவென்ற கன்னியேகேளாய் கணிதநூலறிஞ ரின்கருத்தே. (௪௬௭)

பத்தின்கோளஞ்சோன் பாக்கியன்லாபன் பதிந்திடமுதய கேந்திரமாய், வெத்தியாமுயிரோன் கருமகேந்திரத்தில் விளங் கிட நாலினிற்கரியும், சுத்தியாயிருக்கச் சோமனும்மறையத் தோ ன்றிடப்பிறந்த சாதகற்குச், சித்தியாமரசர் தயவினால்முயற்சி சேர்ந்திடவருமென வுரைத்தார். (௪௬௮)

வருமெனவுரைத்தார் வாக்கின்கோள்திசையில் மாய்ந்திடும் பிதாவுமேயாகும், குருவுமேயிருந்த வீட்டின்கோள்திசையிற்

கொடுத்திடுமெங்களந்தாயார், தருகுவதில்லைகேதுவந்திடுகில் தன முடன்கிரகம்வாகனமும், பெருகிடும்புகர்நா ளதனிலேமுயற்சி பெலத்திடாதிருந்திடவல்லன். (௪௪௯)

வேறு.

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாய்ப்பிறங்கச்
சதிருடன்நாலில்வெய்யோன் சசிமகனோடுசாரப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாம்புடுபதிவந்துற்றால்
துதியுதிரொழியுங்கர்மந் தொடுத்திடும்முப்பத்தஞ்சில். (௪௫0)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாசவக்கோள்
சதிருடனருணனோடு தரித்திடச்சசியும்பாம்பும்
பதிபிதிர்க்குடையோனோடு பதிந்ததிலிருப்பதானால்
துதிபிதிர்நாற்பத்தொன்றிற் றுணிவுடன்கருமஞ்செய்வன். ()

வேறு.

பத்தி னுக்குடை யோனும் பருதியுஞ்
சத்தி யாகியே சார்ந்திடில் நீசமாய்
வித்தி யாக்கரி வீடுபா ழாகிட
மத்தி பத்தினில் மாய்வது சொல்லினோம். (௪௫௨)

அஞ்சி ரண்டு வயதினி லன்னையும்
வஞ்சி யற்கு வயதுமூன் றெட்டிலும்
பஞ்சி னிற்படு தீயது போலவே
விஞ்சை யாக விளையுங் கருமமே. (௪௫௩)

வேறு.

விளங்கியகுழவி தனக்குமொன்பதனில் மேவியகுருசெவ் வாய்வரினும், களங்கமில்லைந்தோன்பொன்னவன்வீட்டிற் கருதி யேமறைந்திடவரினும், தளங்கியகருமன்காரியாய்மதிக்குத்தனி க்கவேழதனிலேநின்றால், துளங்கலாயரவுதிசையதிற்காரிதோன் றவீன்றத்தனும்நாசம். (௪௫௪)

காலினைன்மந்த னாகியேவுயிர்க்கு நண்ணிடவேழினில்மரு வத், தாழ்விலாப்புகர்வீடாகியேஅக்கோள் தரித்திடப்பானுமா லோடு, வாழ்வெனுமதியும் அரவுடன்கூடி மந்தனுக்கட்டமஞ் சேர்ந்தால், மாலவன்வீட்டி லிருந்திடும்புகரில் மாய்ந்திடும்பிதி ருடன்மாதீர். (௪௫௫)

வேறு.

சூரியனுயிர்க்கிராறிற் றேன்றிடவொன்பான்கோளன்
சாரிடம்மால்வீடாகித் தரித்திடச்சுங்கனோடும்
வீரியச்செவ்வாய்கேது வியாழனுமால்வீடுற்றால்
பாரினிற்பிதாவின்கர்மம் பகரலாமரவுநாளில். (௪௫௬)

வேறு.

பருதியுடன்மதிகூடி யாவிக்கஞ்சிற்
பதிந்திடவேயொன்பதின்கோள் மறையச்சுங்கன்
குருதியுடவீடதனில் மறைந்துநிற்கக்
குசனரவுஉயிர்க்கோளாய்க் குலவக்கர்மன்
சுருதிமறையவனுகி மாந்தியோடு
தோன்றிடவே அவன்றிசையிற் றந்தைசாவன்
பருதிதிசையிராகுபுத்தி தன்னிலிந்தப்
பாலனுடசோதரத்தைப் பழியாய்க்கொல்வன். (௪௫௭)

வேறு

சந்திரனுயிரோனட்டமமதனிற் றனித்திடவுயிரினிற்பருதி, வந்திடப்புகருங் கூடிடவாக்கில் மதிமகனிருந்திடக்குருவும், சிந்தியதகரிற் பகையினிற்றனிக்கச் சேயுமேமறைந்திடவுச்சம், முந்தியவுயிருக் கைந்தினிலரவு மோகமாய்க்கேதுவுந்தனுவில். ()

தனுவினுக்குடையோன் மறைந்திடக்குளிகன் தையலாள் தானத்தில்வரினும், மனுவினிற்பெரியோன் மாய்ந்திடுந்தந்தை வயதுபத்தெட்டிலேகருமம், அனுவதாயரவு திசையினிற்குருவி லமைந்திடிற் சோதரதோஷம், பனிமதிபோலே ஆயுளுந்தீர்க்கம் பகர்ந்தனர்பெரியவர்நூலால். (௪௫௯)

ஒன்பதிற்பருதி யிருந்திடவக்கோ ளுடுபதிதனக்குமைந்தி னிலே, துன்பதாய்ச்சேய்வீ டாகியேபகையாய்ச் சுரர்குருவீட்டி னிற்காரி, யின்பமாயுயிரி லிருந்திடக்கேது மிணங்கிடச்சசியுமே தோன்றச், செம்பொன்வீடதனிலிருந்திடுங்காரி திசைதனிற்கரு மங்கள் முடிப்பன். (௪௬0)

முடிந்திடுஞ்சேய்க்கு வயதுமொன்பதுக்குள் மோசமாம்பி தாவையுங்கொல்வன், வடிந்திடுங்குருதி மூலரோகத்தால் வந்து டன் தீர்ந்திடுந்தாய்க்கு, மடிந்திடும்வரைக்கு மதிகபாக்கியங்கள்

வரவரவுயர்ந்திடும்பலன்கள், கடிந்திடுமற்ப ரோகமேவுடையன் கண்டத்தில் ரோகமுமாவன். (சகூக)

பருதியுஞ்சரத்திற் காரியுங்குளிகன் பதிந்திடமூன்றின் கோனுடனே, மிருதுவாங்கருமன் மறைந்திடவுச்சம் விளங்கிட மதிக்குப்பத்தினிலே, கருதியசெவ்வாய் பருதிவீடதனிற் கலந்திடப்பிறந்திடுஞ் சேய்க்குச், சுருதியாம்புகரிற் பிதாவையுங்கொல்வன் தோன்றிடுங் கருமத்துக்குதவான். (சகூஉ)

மாலவன்மறைந்தே ஆட்சியில்வரினும் வரும்பிதிர்காரகன் வாபம், கோலமாயொன்பா னட்டமனுடனே கூடியேபுகருடனிருக்கிற், றலமாய்முன்னோன் றிசைதனிற்பிதாவுந் துஞ்சிடப்பீடையால்திகம், ஏலவேயுதிரவியாதியுமிகுதி யெய்திடுங்கஷ்டமாயிருப்பன். (சகூங)

ஓன்பதுக்குடையோ னாட்சியில்மறைய வுரகமுமுயிரிலே செம்பொன், இன்பமால்வீட்டி லிருந்திடவனலி யிந்துவீடதற்குமூன்றினிலே, அன்பெனமொழியு மனுவழியஞ்சி லமர்ந்திட வந்திடுஞ்சேய்க்கு, செம்பொனார் திசையிற் றனதுநாளதனிற் செத்திடுந் தந்தையென்றியம்பே. (சகூச)

இயம்பினார்மேலோர் பிதிர்வழியதனை லெய்திடுங்கருமங்கள் மூன்றும், வயம்பெருங்கரிநாள் தனதிலுங்கருமம் வந்திடும்பெரியவருளால், சுயம்பெருங்காரி தனதினிற்சுங்கன் தோன்றிடிற் சிவனுடபூசை, நயம்பெரும்படியே நாடினார்கெணிதர் நாயகிதன்னுடனுமே. (சகூரு)

வேறு.

சூரியன்மதிக்கீராறிற் றேன்றிடவுயிரோன்றானுஞ்
சாரிடஞ்சசிவீடாகித் தரித்திடவொன்பான்கோளன்
சீருடன்மறையத்தேளிற் றினகரனரவுமேஷம்
பாரினிலுதிக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனாபிதாவின்கர்மம் ()

வேறு.

பிதிருடன்கரும மரவுநாளந்தி பெருகிடுமல்லது குருவில், கதிர்மகனிற் கலந்திடுமணமுங் கருதினர்புராண கேள்விகளுந், துதியுடன்தனமும் பூசையும்பெருகுஞ் சொல்வதுதர்மசிந்தனையும்; நிதியுடன்சுகமும் புரவியுங்குருவில் நின்றிடும்பெரியவர்மொழியால். (சகூஎ)

ஒன்பதுக்குடையோன் ஆட்சியாயுச்ச முறைந்திடவிரவி யுஞ்சனியும், இன்பபொன்னரவுஞ் சேர்ந்திடிலொன்பா னிருள் வலி கரியைநோக்குற்ருல், அன்புடன்குருநாள் சேயலாலரவி லாகுமே யீன்றவன்கருமம்,முன்புதானிந்தக் கணிதநூல்விதியை மொழிந்தனர் பெரியவர்தாமே. (சகூஅ)

ஒன்பதுக்குடையோ னிரவியும்புகரும் ஒழிந்திடமறைந்தி டக்கரியும், அன்பினலஞ்சோ ஞகியேகுருவுக் கமர்ந்திடமூன்றி னிற்றரிக்கில், இன்பமாய்க்குருவுமேழினிற்ருேன்ற விணங்கிடுங் கருமத்தில்மதியாய்ப், பின்புசேய்வயதுபத்துடனுறுள் பிதாவுட கன்மம்வந்திடுமே. (சகூகூ)

ஒன்பதுக்குடையோன் கேந்திரமதனி லுடுபதிபார்த்திட வஞ்சோன், செம்பொன்வீடதனிலரவுடன்சேரத் தினகரன்மாங் தியும்லாபம், அன்பினுற்கருமன்மாலவனுடனே அணுகிடப்புக ரும்வந்துற்ருல், இன்பமாய்மால்நாளிரவியெய்திடுகி லியம்பினுர் பிதாவுடகருமம். (சஎ0)

ஒன்பதுக்குடையோ னரவுடன்மூன்றி லுறைந்திடத்தினக ரன்நாலில், இன்பமாயக்கோள் காரியாயெட்டி லிருந்திடக்கரு மத்திற்குருவும், அம்புலிகேது முயிருக்கொன்பதனி லமர்ந்திட வந்தசாதகற்கு, வம்பனுங்காரி திசையினிற்றனதில் வந்திடும் பிதாவுடகருமம். (சஎக)

வேறு

பிதிருடைத்தானத்தோனும் பீதகன்மாலுமொன்ருய்ச்
சதிருடன்நாலிற்ருேன்றச் சந்திரன்றனக்கீராருய்
மதிமகன்றனக்கீராறில் வந்திடப்பருதிசெவ்வாய்
துதிபெறவரினுங்கர்மந் தொடுத்திடும்முப்பத்தெட்டில். (சஎஉ)

தந்தையர்கருமஞ்செய்வன் சந்திரன்றனக்குமஞ்சோன்
விந்தையாய்ப்புகருமாலும் வியாழனுமதிக்குப்பின்னுல்
சிந்தையாய்ப்புதல்வரென்றுஞ் செத்திடுமன்றைக்கேதான்
தந்தையர்சொல்லதாலே தரணியில்வாழ்வான்மாதோ. (சஎங)

வேறு.

ஒன்பதுக்குடையோன் கேதுடனஞ்சி லுதித்திடஅரவுமே பார்க்கச், செம்பொனும்பிறையுங் கருமனும்புகரும் சேர்ந்திடச்

சோமன்வீடாகில், அன்பிஞலுயிரோன் றனக்குமீராறி லாதித் தன் மாந்தியுமறையில், இன்பமாயுயிரோன் றிசைவிடும்போது எய்திடும்பிதாவுடகருமம். (சஎச)

மாலவன்புகருங் கருமகேந்திரத்தில் வந்திடக்கரியுமே பார்க்கக், கோலமாயிரவி லாபமாய்வரினுங் குசனுமேமதியுடன் மறையுத், தூலமாயரவும் பாக்கியன்றனக்குத் தோன்றிடநாலிற் கேந்திரமாய், ஏலவேவரினும் பிதாவுடகரும மெய்திடுமெரவுநாள் தனதில். (சஎரு)

வேறு.

பிதிருடைத்தானத்தோனும் பிருகுடனரவுகாரி
சதிருடனுயிருக்காறிற் சார்ந்திடவிரவிபொன்னும்
துதிபெருமஞ்சிலாகச் சோமனுமுயிரிற்சேர்ந்து
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள்தனிப்பாஞகில். ()

தனித்திடப்பிறந்தசேய்க்குச் சாற்றிஞர்கணிதநூலால்
தொனித்திடக்கருமஞ்சொல்லத் தொகுத்தனர்கருமந்தன்னில்
இனித்திடப்பிதிர்போமென்றே இயம்பிஞரன்னேகர்மம்
செனித்திடக்காரிதன்னிற் செய்வனென்றுரைப்பார்மேலோர். ()

வேறு.

ஒன்பதுக்குடையோன் மாலவன்வீட்டி லுறைந்திடச்சேய் குருபாம்பும், இன்பமாய்ப்புகர்வீ டிருந்திடவிரவி யிணங்கிய மால்மதியுடனே, அன்புடனுயிருக் கொன்பதில்வரினு மவன் றனேயீன்றவன் கருமம், துன்பமாய்மாலோன் திசையினிலரவு தோன்றிடில் முடிந்திடவருமாம். (சஎஅ)

வாக்கினில்மதியு மதற்குடையோனும் வக்கிரனரவுடன் பருதி, தாக்கியமதிக்கு ஆறினில்மறையச் சனியுமேநாலினில் வந்தால், பாக்கியனுடனே யிருந்திடுமாரல் பருதிநாள்பிதாவுமே போகும், ஆக்கமாய்க்குருவி லன்னேயும்போக அமைத்தனர்பெரியவர்நூலால். (சஎகூ)

ஒன்பதுக்குடையோன் கேந்திரமதனி லுடுபதியரவுடன் பத்தில், இன்பமாயிரவி மானுடன்கேது மிருந்திடப்புகருமே மறையச், செம்பொனுமுயிரோன் சேர்ந்திடிலஞ்சிற் செனித் திடவந்த சாதகற்குத், துன்பமாய்க்குருநாள் மதியினிற்பிதாவுந் துஞ்சிடுமெனச்சிலர் மொழிந்தார். (சஅ0)

வேறு.

சூரியன்சேய்தொல்புகரோன் சூரியன்வீடேகித்
தோன்றிடமுன்பவர்வருகி லுயிர்க்கோளன்பவரோ
காரிமதியுடன்சேர வுயிர்க்கோளனுடனே
கருதுமுக்கோடணேச்சுபர்கள் கண்விழிப்பார்வையினல்
சீருடன்சேய்பிறந்திடவோ ராண்டுதனிற்றந்தை
சேர்ந்திடுவன்பரதேசம் செப்புமெனவ்வுரையே
பாரினிலேதந்தைபர தேசமதுசேர்வர்
பகர்ந்தனர்கள்சேயொழியுங் குருசிவனுராணை. (சஅக)

வேறு.

ஏழினிலரவ மிருந்திடவக்கோ ளிரவியோ டொன்பதாய்வரினுங், தாழ்விலாவுயிரோன் மதிக்குக்கேந்திரமாய்ச் சார்ந்திடப் பொன்னவன் மறையில், வாழ்வதுவபது பதினைந்துமிரண்டில் மனைவியர்வந்திடும் பிலமாய்த், தூலமாய்ப்புகரோன் திசையினிலரவு தோன்றிடிற் பிதாவுடகருமம். (சஅஉ)

மதியுயிர்தனக்கோ ரிரண்டினிற்குருவாய் மந்தனுமூன்றினிற்சேர, விதியுடன்புகரும் நாலினிலிருக்க வெய்யவன்மால்குசனரவும், துதிபெருமதிக்கு ஆறினிற்றனித்தாற் சோமனுள்முதற்றிசையாகக், கெதிபெறவிருப்பன் பிதாவுமேதனக்கு தீர்க்கமுந்தனமும் வாய்த்திடுமே. (சஅ௩)

தனமுடன்முயற்சி வாணிபமதனுற் றங்கிடும்பிரபலமாகும், குணமுடன் சேய்நாள் பாதிமேலாகக் கொடுத்திடுஞ்சாதகன் றனக்கு, மணமுடனரவு திசையின்முற்பாதி வளர்ந்திடுஞ்சுமனுடன்வாழ்வன், கனமுடன்பாம்பு பாதியுங்குருவுங் கலந்திடு மதிகபாக்கியமாம். (சஅச)

ஒன்பதுக்குடையோன் புகருடனுச்ச முடுபதிதனக்குஙமைந்திடமாய்ச், செம்பொனுங்கேதுஞ் சேர்ந்திடவுயிரிற் றினகரன் சேயுடன் சனியும், அன்பிலாதெட்டி லயர்ந்திடவந்தா லாகிடும் பிதாவுடகருமம், இன்பமாய்நாலோன் திசையினிற்புகர்நா ளெய்திடுமெனச்சிலர் மொழிந்தார். (சஅரு)

ஒன்பதுக்குடையோன் கேதுடன்மதிவீ டுறைந்திட விரவிபொன்மாந்தி, இன்பமாய்க்கருமம் கேந்திரமதனி லிருந்திடமதியுமேமறைய, அன்பதுநாலோன் றிசையினிலன்னை யழிந்திடும்

பிதாவுடகருமம், இன்பமாங்குருவி லாவுநாளந்தி யெய்திடுங்
கருமமேமுடிப்பான். (சஅசு)

வேறு.

சூரியனும்புகருடனே சேய்வீடேகத்
தோன்றிடவே அதற்குடையோன் ரேன்றமில்லம்
சீருடனேசுபர்வீடா யுயிர்க்குநாலிற்
சேர்ந்திடவோர்குமதி யுயிர்க்கோன்பானுங்
கூறியதோரொன்ருகித் தரிக்கவக்கோள்
குறுகிடமேசீபகை வளருமானல்
ஆரியனுணைப்படியே அறியுந்தந்தை
அரவுடனுள் திசைபாதி யறையுமுன்னல். (சஅஎ)

வெய்யவன் றன்னுடன்மதிமால் கரியோடேகி
விளங்குமிக்கோள தன்முன்பின் னுதிக்குமாகில்
மையமறையோனுயிர்க்கும் வெய்யோனுக்கும்
மறையாமலுயிர்ப்பவர்கள் சுபரில்லாதிடுமால்
வையகமீரைந்து சுத்தமதாகிடவே
வரும்வயதுநாற்பதின்மே லொன்றதனேடொன்றில்
உய்யபிதாவினையெடுக்கு மதன்மேலோர்மூன்றி
லுறுமாதர்தனைக்கால னிடத்தனுப்புமுறவாய். (சஅஅ)

வேறு

மந்தனுமொன்பரானகி வருமனையாட்சியுச்சம்
விந்தையாய்மதிமால்சுங்கன் வெய்யவனுடனென்ருகிச்
சிந்தையாயுதயந்தன்னிற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்கு
வந்திடுந்தனையின்றையன் மாய்ந்திடுங்கரிநாட்போக்கில். (சஅகூ)

வேறு.

சூரியன்காரி வீட்டினிற் றேன்றிடக்
காரிதானுங் கருதுயிர்க் கொன்பதிற்
சாருமந்த அதிபனுஞ் சார்ந்திடப்
பாரினிற்பிதா பாழ்படும் பித்தமே. (சகூ0)

வேறு.

சூரியன்மாலுயிர்க்குநா லதனிலிருந்திடுமால்
சுடரோன்முன்பின்மதியுஞ் சுபர்தனித்தேயிடுகில்
பாருயிரில்மாந்தியுற வுயிர்த்தான தலைடையோன்
பஞ்சமமேழதிற்பாவர் வீடதனிலிருந்தால்

நேரிடுவென்னாற்பதுடன் மேல்மூன்றுகூடி
நின்றதன்மேலொருமூன்றுள் மாதர்பிதிரொடுக்குஞ்
சேருமதில்மூன்மாது ரென்றே அறைந்திடலாஞ்
சேயுயிர்க்குமறைந்திடவும் வேண்டுமெனச்செப்பே. ( )

வேறு

தருமொன்பதிலரவெய்திடத் தானுதிபன்பவரால்
வருமாதவன்பிதுர்த்தானத்தை மருவப்பவருடனே
இருமூன்றினில்மும்மூன்றினி லீராறினிற்றந்தை
அருளாயுளுநசியுமென வமைத்தாரறிவுளரே. (௪௯௨)

வேறு

இரவிக்கெட்டிற்சனிசெவ்வா யிருக்கச்சுபர்கள்நோக்கமுறு
தருகியிருக்கப்பிதாமரணந் தபனன்நான்கேநின்றிடினும்
கரவிற்சனிசேய்நோக்கமுறக் கலந்துசனிசேய்கதிர்நடுவாய்
மருவிற்கதிர்சேய்சனிகூடில் மரிப்பன்தந்தையோராண்டில். ( )

சரத்திலிரவிபாவருடன் தயங்கிநிற்கப்பிதாதனக்கு
உரத்தவிஷத்தாற்சத்திரத்தா லுதிரந்தன்னால்வருமரணம்
நிரந்தவெட்டிலிரவிநிற்க நிலத்தின்புதல்வன்நோக்கமுறப்
பொருந்தபகலிற்செனித்தார்க்குப் பூவேபிதாவுமிகமரிப்பன். ( )

மாதாபிதாவை ஒட்டிவித்தல்.

கோட்டிற்பருதிசனிநிற்கக் குருநிகுருவில்நோக்கிடினும்
நாட்டிற்பகலேஜெனித்தார்க்கு நல்லதந்தைதேசமதில்
ஓட்டிவிடுமேதப்பாதிங் குதவாமலுக்கவர்தானும்
கோட்டிதனத்துமயிலணங்கே குறித்தார்தமிழ்நூல்வல்லோரே.

ஆட்டிலவன்துலைமானு மதனிற்பருதிசனிசேயுங்
கூட்டிவருமேவக்கிரக்கோள் குலாவிநோக்கமுற்றதனால்
நீட்டிலிரவிற்செனிப்பார்க்கு நிலையாரன்னைதேசமதில்
ஓட்டிலிரந்தேவுணவுண்டே வுடலையிழப்பாளொண்டொடியே.

**பிதிர்பாவகம் முற்றிற்று.**